2019

# சத்திய முழக்கம்



Saththiya Muzhakkam Ministries

**Rev. S.A. Sundararaj**

Vellore - 632 006.

# பட்டய உறையிலிருந்து

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, கர்த்தரின் கிருபையால் இவ்வாண்டின் இறுதியில் இந்த இதழ் உங்கள் கரங்களில் வந்தடைந்திருக்கிறது.

நம்முடைய போதகர் Rev. S.A. Sundararaj ஐயா அவர்கள் பிரசங்கித்த செய்திகளை சத்திய முழக்கத்தில் எழுத்து வடிவத்தில் கொண்டு வந்திருக்கிறோம். இவைகள் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

"இருளில் அவரையே பற்றிக்கொள்" என்ற செய்தி 10.1.2016 அன்று அதாவது நம்முடைய போதகர் தேவ இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்கு சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு கொடுத்த செய்தி. "கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்கும்போது கூட வெளிச்சம் இல்லாதிருக்கும்" அப்படி நடக்கும் போது அவன் கர்த்தரையே சார்ந்துக் கொள்ள வேண்டும். இந்த உலகம் எனக்கு நிரந்தரமானது அல்ல; நாம் நித்திய இராஜ்ஜியத்திற்குப் போய்ச் சேர வேண்டும் என்ற நித்திய நம்பிக்கையை நம்மில் வளரச் செய்யும் வல்லமையான செய்தி.

"வாழ்க்கையில் நோக்கம்" நம்முடைய வாழ்க்கையில் எல்லா சூழ்நிலையிலும் தேவ நோக்கத்தை உணர்த்துகிற ஓர் சிறப்பான பிரசங்கம்.

"நீடிக்கட்டும்! நீங்கட்டும்! என்பது நம்முடைய அன்றாட பிரச்சனையில், நெருக்கமான சூழ்நிலையில் நம்முடைய விசுவாசத்தைத் தூண்டுகிற ஒரு அருமையான செய்தி.

இவைகள் நமக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறோம். சிலுவை வழியில்லாமல் சிங்காசனத்திற்கு வழி இல்லை. பாடுகள், உபத்திரவங்கள் கண்ணீர் நிறைந்த இலட்சியப் பாதையைச் சுட்டிக்காட்டுகிறது நம்முடைய சத்திய முழக்கம்.

நமது வாழ்க்கை இன்பச் சுற்றுலா அல்ல; இலட்சியப் பயணம்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

Office :
HOD, IT CMCH, Vellore.
email : esundararaj@gmail.com

கிறிஸ்துவின் பணியில்
**Ebenezar Sundararaj**

# இருளில் அவரையே பற்றிக்கொள்

உன்னை உயர்த்துவேன் என்று தேவன் தனக்குக் கொடுத்த தரிசனத்தை முன் வைத்து நடக்கிறான் யோசேப்பு. அப்படி நடக்கும்பொழுது அவன் சந்தித்தது எதிரிடையான சூழ்நிலையாகிய இருள். குழியிலே தூக்கிப் போடப்படுகிறான், விற்கப்படுகிறான், சிறைச்சாலையில் அடைக்கப்படுகிறான்... எல்லாமே எதிரிடையான சூழ்நிலை.

சிறைச்சாலையில் யோசேப்பு தேவன் கொடுத்த தரிசனத்தை, வாக்குத்தத்தத்தை சிந்திக்கிறான். மனசோர்வு அடையவில்லை. அவன் இதயத்தில் நம்பிக்கை, நிச்சயமாகவே தேவன் தந்த தரிசனம் ஒருநாள் நிறைவேறும் என்று. அந்த நம்பிக்கையினால் அவன் அந்த இருளிலே தொடர்ந்து நடக்கிறான். யோசேப்பின் ஆரம்ப நடைகள் இருட்டு நடைகள். ஆனால் தளராத நடைகள், நம்பிக்கையின் நடைகள். அவனுக்கு எத்தனையோ எதிர்ப்புகள், இடையூறுகள். ஆனாலும் அவன் தொடர்ந்து தேவன் மீது நம்பிக்கையோடு நடக்கிறான்.

என் அருமையான சகோதரனே, சகோதரியே! உனக்குக் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம், அது இப்பொழுது நிறைவேறிவிடும் என்று மிகுந்த ஆவலுடன் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கும்பொழுது அதற்கு எதிரிடையாக ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் நீ சந்திக்கிறாயா? நீ சோர்ந்து போகவேண்டாம். ஆதி பக்தர்களும் இப்படித்தான் எதிரிடையான சூழ்நிலைகளை சந்தித்தார்கள். ஆனால் நம்பிக்கையோடு தொடர்ந்து நடந்தார்கள் என்று வேதம் சொல்கிறது.

"அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது. கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது." (சங் 105:18,19) ஏன் யோசேப்புக்கு இந்த நிலைமை? அவன் கர்த்தர் தந்த தரிசனத்தை,

வாக்குத்தத்தத்தை நம்பினபடியினால் அவனுக்கு எதிரிடையான சூழ்நிலைகள் உண்டாயின. இந்த வாக்குத்தத்தத்தை அவன் பெறாவிட்டால் அவன் சாதாரணமாக வாழ்ந்திருப்பான். கர்த்தர் அவனை மேன்மைப்படுத்துவேன், தலையாக்குவேன் என்றெல்லாம் சொல்லியிருந்தார். இதை நம்பி நடந்தான், ஆனால் அவன் சந்தித்தது பாடுகளும் வேதனைகளும்.

அவனுடைய கரத்திலே விலங்குகள் போடப்பட்டன, இரும்பு அறையிலே தள்ளப்பட்டான். அவன் சரீரம் அடைந்த வேதனையைவிட, அவனுடைய மனது மிகவும் வேதனைப்படுகிறது. அவன் ஆத்துமாவிலே ஓர் பெரிய இரும்பு பட்டயம் பாய்ந்தது. அவன் இருதயத்தில் ஆயிரம் ஆயிரம் கேள்விகள், கர்த்தரை நம்பி வாழ்கிற எனக்கு ஏன் இத்தனை எதிர்ப்புகள்? தேவன் தந்த வாக்குத்தத்தத்தை நம்பினது குற்றமா? என் தாசனுடைய சொல்லைக்கேட்டு நடக்கிற எனக்கு வெளிச்சமில்லையே? தேவன் சொன்னதைத்தானே நம்பினேன், நடக்கும் என்று தேவன் தானே சொன்னார்; இப்பொழுது எல்லாமே இருளாக மாறிவிட்டதே என்று கலங்கி நிற்கிறான்.

அருமையான சகோதரனே, சகோதரியே! தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்று ஆவலாயிருக்கும்போது அது வேறுவிதமாக மாறியிருக்கிறதா? கண்களில் கண்ணீரை வரவழைக்கிறதா? இது ஆசீர்வாதமாக முடிந்துவிடும் என்று அடியெடுத்து வைத்தேனே, நடக்காமல் போய்விட்டதே! வேதனையும், சங்கடமும், கவலையும் சஞ்சலமுமாக இருக்கிறதே என்று அங்கலாய்க்கிறீர்களா? தேவன் எனக்குக் கொடுத்த வார்த்தையின்படிதானே செய்தேன், ஏன் இப்படி எதிரிடையாக மாறிவிட்டது? தேவனுடைய சொல்லைக்கேட்டு அதன்பிறகும் உனக்கு வெளிச்சம் இல்லாதிருக்குமானால் உன் விசுவாசப் பிரயாணத்தை நிறுத்திவிடாதே! உன் நம்பிக்கையிலே சோர்ந்துவிடாதே. தொடர்ந்து நட. கர்த்தரையே சார்ந்துக்கொள்.

“உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால்

இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துக்கொள்ளக்கடவன்." (ஏசா.50:10) கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்கும்போதுகூட வெளிச்சமில்லாதிருக்கும். அப்படி நடக்கும்போது அவன் கர்த்தரையே சார்ந்துக்கொள்ள வேண்டும்.

வேலை கிடைக்கும் என்று ஆவலாய் காத்திருந்தாய், வேலையில் சேரவேண்டிய நேரத்தில் நேர் எதிரிடையான சூழ்நிலையாக மாறிவிட்டதா? உன் வாழ்க்கை வளமாக இருக்கவேண்டும் என்பதற்காக கர்த்தருடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு வார்த்தைகளைக் கைக்கொண்டு வந்தாய். ஆனாலும் வாழ்க்கை பாலைவனம்போல வெறுமையாகி விட்டதா? எல்லாமே வித்தியாசமாகவே மாறிவிட்டதா? இருண்ட பாதையிலே தள்ளப்பட்டு விட்டாயா? சுற்றியிருக்கிற இன ஜனங்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மத்தியிலே கேள்விக்குறிபோல உன் வாழ்க்கை அமைந்துவிட்டதா? வெளிச்சம் வெளிச்சம் என்று போனாயே, இப்பொழுது என்ன நடந்தது என்று பரிகாசம் பண்ணுகிறார்களா? நீ ஆராதிக்கிற தேவன் உனக்கு என்ன செய்துவிட்டார்? உன் நம்பிக்கை என்னவாயிற்று? விசுவாசம், பக்தி, தேவன் உனக்கு கொடுத்த வார்த்தைகள் என நம்பி வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தாயே, என்னவாயிற்று? இருள்தானே உனக்குக் கிடைத்தது என்று உலகம் உங்களைப் பார்த்து கேள்விகளைக் கேட்டு உங்களை நிந்திக்கலாம்.

என் அருமையானவர்களே, உங்கள் விசுவாச பிரயாணத்தை நிறுத்திவிடாதீர்கள். நான் இந்த வாக்குத்தத்தத்தை நம்பியதே தவறு, நான் விசுவாசித்ததே தவறு, இன ஜனங்கள் எத்தனையோ ஆலோசனைகளைக் கொடுத்தார்களே, அவைகளின்படி நடந்திருக்கலாம், இப்படி எல்லாவற்றையும் தள்ளிவிட்டு கர்த்தர் தருவார், கர்த்தர் செய்வார், கர்த்தர் நடப்பிப்பார் என்று நான் நம்பினேனே, என் வாழ்க்கையில் என்னவாயிற்று? எல்லாமே ஏமாற்றமும், வருத்தமும், சஞ்சலமும், பாடுகளும், துன்பங்களும்,

துயரங்களும், இடையூறுகளும், இன்னல்களும், வருத்தங்களும் வாட்டங்களுமாய் போய்விட்டதே என்று மனம் சோர்ந்து போய்விட்டீர்களா? என் அருமையான சகோதரனே! சகோதரியே! ஆண்டவருடைய வார்த்தை கடந்து வருகிறதைக் கவனியுங்கள்.

நீங்கள் இருளிலே இருந்தாலும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு இருளிலே இருப்பீர்களானால் உங்களுக்கு ஒரு ஆபத்துமில்லை. நீ ஆத்திரப்பட்டு உன் வேதத்தை மூடிவிடாதே, உன் ஜெப அறையைவிட்டு வெளியே வந்துவிடாதே. அந்த இருளைக் கர்த்தர் பொறுப்பேற்றுக்கொள்வார். அந்த இருளுக்கு கர்த்தரே பதில் சொல்வார். ஆகையால் கர்த்தரையே சார்ந்துக்கொள்ளுங்கள். ஜெபிக்கிற நீங்கள் தொடர்ந்து ஜெபியுங்கள், வேதம் வாசிக்கிற நீங்கள் தொடர்ந்து வேதத்தை வாசியுங்கள். நீங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போக மாட்டீர்கள். உங்கள் இருளைக் கர்த்தர் வெளிச்சமாக மாற்றுவார். ஆகவே தொடர்ந்து இந்த இருளிலே நடவுங்கள் என் பிரியமானவர்களே.

ஆபிரகாமைக் குறித்து அநேக காரியங்களை நாம் அறிந்திருக்கிறோம். கர்த்தர் ஆபிரகாமிற்கு ஒரு பெரிய தேசத்தைத் தருவேன் என்று வாக்களித்தார். மெசபத்தோமியாவின் ஊர் பட்டணத்தை விட்டு ஆபிராகாமை தேவன் வெளியே வரவழைக்கும்போது உனக்கு ஒரு தேசத்தைத் தருவேன் என்று கர்த்தர் சொன்னார். தேவன் தருவேன் என்று சொன்ன தேசத்திலே இன்று ஆபிரகாம் அந்தப் பெரிய தேசமாகிய கானானில் நிற்கிறான். தன் கண்களை ஏறெடுத்து கானான் தேசத்தைப் பார்க்கிறான்.

அந்த தேசம் பத்து இராஜாக்களின் கரத்திலே இருக்கிறது. தேவன் கொடுப்பேன் என்று சொன்ன தேசத்திலே ஒரே ஒரு இடம் ஆபிரகாமிற்கு சொந்தமாக இருக்கிறது. அது எந்த இடம்? சாராளின் கல்லறை மாத்திரமே. மக்பேலா குகையில் ஒரு கல்லறை மாத்திரமே சொந்தமாயிற்று. ஒரு தேசமே கிடைக்கும் என்று இருந்த ஆபிரகாமிற்குக் கிடைத்தது

ஒரு கல்லறை மாத்திரமே. உலகம் அவனைப் பரிகாசம் பண்ணியிருக்கும். எத்தனை நம்பிக்கையாய் புறப்பட்டுப்போனான், கடைசியில் அவனுக்குக் கிடைத்தது என்ன? தேசத்தைத் தருவேன் என்று வாக்களித்த தேவனின் சொல்லைக் கேட்டு புறப்பட்ட அவன் இன்று ஒரு கல்லறையின் முன்பாக நிற்கின்றான். ஆபிரகாம் இருண்ட பாதையில் நடக்கின்றான். கர்த்தரின் சொல்லைக்கேட்டு ஊர் பட்டணத்தை விட்டு புறப்பட்டவன் இன்று கல்லறையின் முன் நிற்கின்றான்.

அருமையானவர்களே, நீங்களும் கர்த்தரின் வார்த்தையைக் கேட்டு இருளிலே நடக்கிறவர்களாக இருந்தால் உங்கள் பிரயாணத்தை நிறுத்திவிடாதீர்கள். ஒரு ஆழமான தீர்மானம் எடுங்கள். உலகத்தினுடைய சொல்லைக் கேட்டு நான் என் பிரயாணத்தை நிறுத்திவிடமாட்டேன் என்று அந்த இருளிலே தொடர்ந்து நடவுங்கள். கல்லறையின் முன் நிற்கும் ஆபிராகாமைப் பார்த்து கேட்டிருப்பார்கள், இதுதான் கர்த்தர் கொடுத்த தேசமா என்று? உலகம் உங்களைப் பார்த்தும் கேள்விகளைக் கேட்கும். திருமணம் நடக்கும் என்று சொன்னாரே, நடந்ததா? வேலை கிடைக்கும் என்று சொன்னாரே, கிடைத்ததா? சுகம் கிடைக்கும் என்றாரே, கிடைத்ததா? நீ ஆராதிக்கிற தேவன் எங்கே? விடையில்லா வினாக்கள். கண்களுக்கு முன்னே நீண்ட இருண்ட பாதை. என் அருமையான சகோதரனே! சகோதரியே! நம்முடைய வாழ்க்கையில் அநேக சமயத்திலே கர்த்தரை நம்பி வந்தபிறகு இப்படிப்பட்ட பரிதாபமான நிலையில் நாம் நிற்கக்கூடும், சோர்ந்துபோக வேண்டாம். கர்த்தர் அந்த இருளை வெளிச்சமாக மாற்றுவார்.

ஆபிராகமிற்குக் கொடுப்பேன் என்று சொன்ன தேசம் என்னவாயிற்று? அருமையானவர்களே! அந்தத் தேசம் அவனுக்கு இன்னும் சொந்தமாகவில்லை. அந்தத் தேசம் அவனுக்கு எப்பொழுது கிடைக்குமென்றால், ஆண்டவர் சொல்கிறார், (ஆண்டவர் இதைச் சொல்லும்பொழுது ஆபிரகாமிற்கு பிள்ளை இல்லாத காலம்.) உனக்கு ஒரு மகன் பிறப்பான், அவனுக்கு ஒரு மகன் பிறப்பான் அதாவது

உன் பேரன் காலத்தில் அவன் எகிப்துக்குப் போவான். அவனுடைய சந்ததியார் 400 வருடங்கள் அங்கேயிருப்பார்கள். 400 வருடம் கழித்து அவர்கள் கானான் தேசத்திற்கு திரும்பி வருவார்கள், அப்பொழுது இந்தத் தேசம் உனக்குச் சொந்தமாகும் என்றார்.

மிக நீண்ட இருண்ட காலம் ஆபிரகாம் சோர்ந்து விடவில்லை. இந்த நீண்ட காலத்திற்காக அவன் சோர்ந்துபோகாமல் அவன் காத்திருந்தான். தேவனுடைய வார்த்தை நிச்சயமாக நிறைவேறும். இருட்டாக இருந்தாலும் பரவயில்லை. இந்த இருட்டிலே நான் கர்த்தரையே நம்பியிருப்பேன் என்று கர்த்தரையே நம்பியிருந்தான். பிரியமானவர்களே! கர்த்தர் நம்மை 400 வருடங்கள் காத்திருக்கச் சொல்லவில்லை. 4 வருஷம், 4 மாதங்கள், 4 நாட்கள், 4 மணி நேரம் காத்திரு என்று கர்த்தர் சொல்லும்பொழுது ஏன் சோர்ந்துபோகிறீர்கள் அருமையானவர்களே!

என்னுடைய இருட்டு 4 மணி நேரமோ, 4 நாட்களோ, 4 வருஷமோ! கர்த்தருடைய சொல்லைக்கேட்டு நான் இன்று பிரச்சனையில் சிக்கியிருந்தால் பரவயில்லை, நான் அந்தப் பிரச்சனையிலே என் தேவனையே சார்ந்திருப்பேன் என்ற தீர்மானம் வேண்டும். இந்த இருளிலே நான் பயந்துவிடமாட்டேன் நான் தைரியமாகவே இருப்பேன் என்ற முடிவை எடுங்கள். இப்படித்தான் ஆபிரகாம் தைரியமாகவே கடந்து போனான். ஓரு வாக்குத்தத்தத்தை தேவன் ஆபிரகாமிற்குக் கொடுக்கிறார். அதென்னவெனில் ஒரு தேசத்தைத் தருவேன் என்று சொல்லியிருக்கிறார். ஆவலாய் அந்தத் தேசத்தை எட்டிப்பார்க்கிறான். அது 400 வருடத்திற்குப் பிறகு நடக்கும் என்று சொல்லப்படுகிறது. "ஏனெனில், தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்." (எபி 11:10)

வாக்குத்தத்தம் வெகு தூரத்திற்குச் சென்றுவிட்டது. தூரத்திலே அதைக் கண்டு அணைத்துக்கொண்டான். அந்தத்

தேசம் எனக்கு இன்னும் சொந்தமாகவில்லை. ஆனால் நான் இன்னொரு தரிசனத்தைக் காண்கிறேன், பரலோக இராஜ்ஜியம் எனக்காக ஆயத்தமாகிறது, நித்திய இராஜ்ஜியத்திற்காக நான் ஆயத்தமாகிறேன். கர்த்தர் எனக்காக ஒரு தேசத்தை வைத்திருக்கிறார், அது பரம தேசம். அந்தப் பரம தேசத்தை பார்க்கும்பொழுது இந்த உலகத்தினுடைய இருள் எனக்கு அற்பமாய்த் தெரிகிறது. கர்த்தர் என்னை நித்தியத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். பரலோக இராஜ்ஜியத்தின் மேன்மையும் பரலோக இராஜ்ஜியத்தின் வல்லமையும், பரலோக இராஜ்ஜியத்தின் அழகையும் பார்க்கும்போது இந்த பூமியின் இருள் எனக்கு அற்பமாகவே இருக்கிறது. நான் சந்தோஷமாகவே கடந்து போகிறேன். இந்த உலகம் எனக்கு நிரந்திரமானதல்ல. என் குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. அங்கிருந்து ஒரு இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த ஜீவ நம்பிக்கை நமக்கு வேண்டும் பிரியமானவர்களே!

அடுத்த ஆண்டு இந்த உலகத்தில் எவ்வளவு சந்தோஷமாக இருப்போம் என்றல்ல. பரலோக இராஜ்ஜியத்திற்கு நான் ஆயத்தமாவேன், கர்த்தருடைய வருகை இந்த வருடம் இருக்குமானால் மத்திய வானத்தில் என் கர்த்தரை சந்திக்க நான் ஆயத்தமாவேன், பரலோக இராஜ்ஜியம் சென்று அடைவதுதான் மிக முக்கியமான காரியம். ஆகையால் நித்திய நம்பிக்கையில் இந்த இருளிலே கர்த்தரையே நம்பி சார்ந்திருப்போம். இந்த நித்திய நம்பிக்கை தான் ஆபிரகாமை இந்த நீண்ட பயணத்தை மறக்கச் செய்தது.

ஆபிரகாம் நித்திய நம்பிக்கையை அடைவதற்கு இரண்டு காரியங்கள் அவனுக்கு உதவியாக இருந்தது. அவைகளில் ஒன்று மேடைகள், மற்றொன்று அவன் கட்டிய கூடாரங்கள். கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கு மேடைகள். இந்த உலகம் எனக்கு நிரந்தராமானது அல்ல என்று உணர்த்துவதற்கு அவன் கட்டிய கூடாரங்கள். நீங்கள் மாடிவீட்டில் வாழலாம் ஆனால் இதயத்திலே கூடாரத்திலே சஞ்சரியுங்கள். இந்த உலகம் எனக்கு நிரந்தரமானது அல்ல, நான் நித்திய

ராஜ்ஜியத்திற்கு போய்ச் சேரவேண்டும் என்பதுதான் நிரந்தரமானது என்ற நம்பிக்கையிலே இருக்க வேண்டும்.

இந்த நித்திய நம்பிக்கையைப் பார்க்கும்பொழுதுதான் இந்த உலகத்தில் இருளை சகித்துக்கொள்ளமுடியும். ஆகையால் இந்த உலகமே போதும். இந்த உலகத்தின் ஆசீர்வாதங்களே எனக்குப் போதும் என்று எண்ணுவீர்களானால் நீங்கள் இருளைக் கடந்துபோக முடியாது. ஆகவே நித்திய நம்பிக்கையிலே நான் வாழ வேண்டும். நித்திய நம்பிக்கையிலே நாம் சஞ்சரிப்போமானால் இந்த உலகத்தின் இருள் நம்மை அதிகமாகப் பாரப்படுத்தாது. ஆகவே தேவன் கொடுத்த வசனத்தின்படியே நடக்கும்போது விடுதலையில்லாதபடி இருளாக இருக்குமானால் நித்திய நம்பிக்கையோடு பிரச்சனைகளைப் பார்ப்போம். அது நமக்கு சமாதானத்தைத் தரும். ஆபிரகாம் தனக்கு தேசம் கிடைக்கவில்லை என்றவுடன் மேலாகப் பார்த்தான். தேவன் தாமே அஸ்திபாரமிட்ட நித்திய நகரத்தை நோக்கிப்பார்த்தான். அந்த நம்பிக்கை அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. வாக்குத்தத்த நாட்டை அவன் பெறவில்லை, ஆனாலும் அவன் இருதயம் மகிழ்ந்திருக்கிறது, காரணம் அவனுடைய நித்திய நம்பிக்கையே. நாமும் அந்த நம்பிக்கையிலே ஜீவிப்போம்.

முதலாவது நாம் நம்முடைய நம்பிக்கை என்னவென்று தெரிந்துக்கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்து வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த நம்பிக்கையை வளரச் செய்கிறோம். ஏன் இயேசு வரவேண்டும்? நான் அழுதுக்கொண்டிருக்கும்போது என் கண்ணீரைத் துடைக்க இயேசு வரவேண்டும், நான் பலவீனமாக மருத்துவமனையில் படுத்திருக்கும்போது என்னை சுகமாக்க இயேசு வரவேண்டும். நான் சஞ்சலத்தோடு படுத்திருக்கும்போது என்னை ஆற்றித் தேற்ற இயேசு வரவேண்டும், நான் பயந்து நடுங்கியிருக்கும்போது என்னை அரவணைக்க இயேசு வரவேண்டும்... இப்படியெல்லாம் நாம் இயேசுவை எதிர்பார்க்கிறோம். இயேசு வருவார் என்று நம்புகிறோம் ஆனால் இயேசு வரவில்லை.

கண்ணீர் வடிந்துக் கொண்டேயிருக்கிறது, வியாதி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது, பிரச்சனைகள் கடுமையாகிக்கொண்டே இருக்கிறது. இருள் நீடிந்துக்கொண்டே போகிறது. அவர் வரவேண்டும், ஆசீர்வாதத்தோடு இயேசு என் வீட்டிற்கு வரவேண்டும், என் வாழ்க்கையில் கர்த்தரின் கரம் அமரவேண்டும், ஒரு மாற்றம் உண்டாக வேண்டும், ஒரு ஆசீர்வாதம் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அவர் வரவில்லை, இருட்டாகவே இருக்கிறது. அவர் எதற்காக வரவேண்டும் அருமையானவர்களே? நம்முடைய கண்ணீரைத் துடைக்க, நம்மை ஆறுதல்படுத்த, நம்மை தேற்ற வரவேண்டும் என எதிர்பார்க்கிறோம். சற்று மாற்றி இன்னோருவிதமாக யோசியுங்கள், இவ்விதமாகவும் இயேசு வரவேண்டும்.

"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்கசர் வர எதிர்பார்த்துக்கொணடிருக்கிறோம்." (பிலி. 3:20) இந்த எண்ணம் நமக்கு எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். நம்முடைய சொந்த ஊர் பரலோகம்தானே. அந்த சொந்த ஊருக்குப் போக நமக்கு ஓரு ஆசை வேண்டும். இந்த ஆசையினால் இந்த உலகம் நமக்குச் சொந்தம் அல்ல என்ற உணர்வு ஏற்படவேண்டும். நான் இங்கு ஒரு பரதேசி. இந்த உலகத்தை பொறுத்தவரை நான் அன்னியன். இந்த எண்ணத்தை நாம் அதிகமாக வளர்க்கவேண்டும். இந்த உலகம் எனக்குச் சொந்தமானது அல்ல, நான் இந்த உலகத்தில் நிரந்தரமானவன் அல்ல, ஆனால் எனக்கு ஓரு நிரந்தரமான வீடு உண்டு, அது பரம வாசஸ்தலம், அங்கு நான் போய்ச் சேருவேன் என்ற நம்பிக்கை நமக்கு எப்பொழுதும் வேண்டும்.

ஆனாலும் நம்முடைய தேவன் பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும் தரவல்லவர். நம் சரீரப் பிரச்சனையில் இரட்சிக்கிறவர், கண்ணீரைத் துடைக்கிற இரட்சகர், வியாதியை சுகமாக்குகிற இரட்சகர், பணப்பிரச்சனையை தீர்க்கிற இரட்சகர்.

இந்த இரட்சகரை மாத்திரமல்ல, இந்தப் பூமியிலிருந்து அழைத்துக்கொண்டு போகிற இரட்சகரை, மத்திய வானத்திலே வரப்போகிற இரட்சகரை... அவரையே நான் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறேன். இந்த எதிர்பார்ப்பு இருந்தால்தான் நாம் நம்முடைய இருளையெல்லாம் சகித்துக்கொள்ள முடியும். நம்முடைய கண்ணீரை கர்த்தர் துடைக்க வராதது இருள், பணபிரச்சனையில் கரம் நீட்டாதது இருள், என் வியாதியை சுகப்படுத்தாதது இருள், இந்த இருளையெல்லாம் எப்படி தாங்கிக்கொள்ளமுடியும்? அவர் என்னைச் சந்திக்க வருவார் என்ற நம்பிக்கை இருக்கும்பொழுது. மத்திய வானத்தில் நம்முடைய இரட்சகரை எதிர்பார்த்திருந்தால் நிச்சயமாகவே இந்த இருளை நாம் தாங்கிக்கொள்ளமுடியும்.

இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். (1கொரி.15:20) உலகத்திலே மிகப் பரிதாபமான கூட்டம் யாரென்றால் கிறிஸ்தவர்கள் தான். நாம் ஓர் குஷ்டரோகியைப் பார்த்து, ஐயோ பரிதாபமான மனிதன் என்று சொல்லுவோம். மிகச் சங்கடமான சூழ்நிலையில் இருக்கும் மனிதர்களைப் பார்த்து, பரிதாபமான மனிதர்கள் என்று வருத்தப்படுவோம். ஆனால் உலகத்திலே மிகப் பரிதாபமான மனிதன் கிறிஸ்தவன். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக மாத்திரம் கர்த்தரை நம்புகிற கிறிஸ்தவன் பரிதாபமானவன். (Of all the people most misrable one is the Christian who belive in Christ only for the temporal things.) உலகப்பிரகாரமான நன்மைக்காக, ஆசீர்வாதத்திற்காக மாத்திரம் கூடுகிற கூட்டத்தில் தேவன் பிரியப்படுகிறவரல்ல. நித்திய ராஜ்ஜியத்தின் நம்பிக்கைக்காக பிரயாசப்படுகிற கூட்டத்திலே கர்த்தர் பிரியப்படுகிறார்.

ஆகையால் என் அருமையான சபையே! உன் நம்பிக்கையை மாற்று. உலகப்பிரகாரமான காரியங்களை மாத்திரமே எதிர்பார்த்துக் கொண்டிராதே! நீ பரம நம்பிக்கையை எடு. தேவன் என்னைச் சந்திக்க வரும்போது

அவரை சந்திக்க நான் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்று நீ ஆயத்தப்படுவாயானால் இந்த உலகத்தில் இருளை நீ சீக்கிரம் கடந்துபோவாய். உன் வாழ்க்கை ஆசீர்வாதமுள்ளதாக மாறும். நமக்கு தேவனால் கொடுக்கப்பட்ட காரியம் என்னவென்றால், "கர்த்தருடைய வார்த்தையைக் கேட்ட பிறகும் உனக்கு இருளாக இருக்குமானால் நீ தொடர்ந்து அந்த இருளிலே கர்த்தரையே சார்ந்திருங்கள்." ஆம் பிரியமானவர்களே, இதுதான் நமக்கு கொடுக்கப்பட்ட தரிசனம்.

மனிதர்களுக்கு ஞானம், பணம், ஐசுவரியம் இவைகள் பொக்கிஷமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காக கர்த்தர் ஒருவனுக்கு ஏராளமான பணத்தைக் கொடுக்கிறார். அவன் கோடீஸ்வரனாக இருக்கிறான். எதற்காக? மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதற்காக. அந்த நம்பிக்கையில்தான் ஒருவனுக்கு ஐசுவரியத்தைக் கொடுக்கிறார். மற்றவனுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார். ஏனென்றால் அவன் தன்னை ஞானவானாகக் காட்டுவதற்காக அல்ல, அவன் மற்றவர்களுக்கு பிரயோஜனமாக இருப்பதற்காக. இவையெல்லாம் நமக்கு பொக்கிஷமாகக் கொடுக்கப்படுகிறது. இப்படி கொடுக்கப்படுகிற பொக்கிஷங்களில் ஒன்று துன்பமும், கஷ்டமும். இதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை அல்லவா?

எனக்கு அதிகமான வருத்தங்களையும். அதிகமான கஷ்டங்களையும், நீண்ட இருளையும் தேவன் கொடுத்திருக்கிறார். எதற்காக? இருளில் நடக்கிற தேவ பிள்ளைகளுக்கு என் துன்பத்தின் அனுபவத்தையும், கஷ்டத்தின் அனுபவத்தையும் பகிர்ந்து கொடுப்பதற்காகவே. தள்ளாடுகிற கிறிஸ்தவர்களைத் தாங்கிப்பிடிக்க, தடுமாறுகிற கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் சொல்ல, தேவன் எனக்குக் கொடுத்த பங்கு வருத்தமும், சஞ்சலமும். வருத்தப் படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்ல தேவன் எனக்கு வருத்தத்தைக் கொடுத்தார். கண்ணீர் வடிக்கிறவர்களின்

கண்ணீரைத் துடைப்பதற்காக என் கண்களில் கண்ணீரைத் தந்தார். இதுவும் தேவன் நமக்கு கொடுத்த பொக்கிஷங்களில் ஒன்று.

சிலருக்கு பணத்தைக் கொடுத்தார், சிலருக்கு பதவியைக் கொடுத்தார். சிலருக்கு அந்தஸ்தைக் கொடுத்தார். சிலருக்கு ஐசுரியத்தைக் கொடுத்தார். ஒரு சிலருக்கு கண்ணீரையும் வேதனையையும் கொடுத்தார். அந்த ஒரு சிலரில் நாமும் இருக்கலாம் அல்லவா? இதற்கு நம்முடைய மனம் இடம் கொடுக்கிறதா? பணத்தைக் கொடும், நான் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுக்கிறேன். ஞானத்தைக் கொடும், நான் பகிர்ந்து கொடுக்கிறேன். கர்த்தர் கேட்கிறார். கண்ணீரைத் தருகிறேன், கண்ணீர் சிந்துகின்ற என்னுடைய பிள்ளைகளுக்கு ஆறுதலைப் பகிர்ந்துக் கொடுப்பாயா? வேதனையைத் தருகிறேன், வேதனையுள்ளவர்களுக்கு சமாதானத்தைப் பகிர்ந்து கொடுப்பாயா?

இந்தப் பொக்கிஷங்களை தேவன் கொடுத்தால் வாங்கிக்கொள்ள மனதுள்ளவர்களாயிருப்போமா? சங்கடத்தை நான் உனக்குக் கொடுத்தால் நீ ஏற்றுக்கொள்வாயா? என் சத்தத்தைக் கேட்டு உனக்கு வெளிச்சமில்லாத காலத்தைத் தந்தால் அந்த இருளை ஏற்றுக்கொள்வாயா? அந்த இருளிலே என்னை சார்ந்திருப்பாயா? இதற்கு நம்மிடத்தில் என்ன பதில் இருக்கிறது அருமையானவர்களே! ஆம் என்று நம்மால் சொல்ல முடியுமா? நிதானமாக சிந்தியுங்கள். பயப்படாதேயுங்கள்! இந்த அழைப்பு எல்லாருக்கும் கிடையாது. எல்லாருக்கும் பணத்தைக் கொடுக்கலாம். எல்லாருக்கும் பதவியைக் கொடுக்கலாம். இந்த வருத்தமும், சஞ்சலமும், கண்ணீரும், கஷ்டமும் மிகச் சிலருக்குத்தான் எல்லாருக்கும் அல்ல.

## இருளிலும் கர்த்தரையே மகிமைப்படுத்து

இருளாக இருப்பதினாலே சோர்ந்துபோய்விடாதீர்கள். இந்த இருளில் தொடர்ந்து நடப்பது பெரிய பாக்கியம். நம்

கர்த்தர் மன மகிழ்ச்சியடைவார். இருளிலே அவரை சார்ந்துக்கொள்ள வேண்டும். எல்லாமே நமக்கு நன்மையாக நடக்கும்பொழுது, அல்லேலூயா! ஓசன்னா! என்று சொல்லுவது எளிதான காரியம். பக்தன் யோபு என்ன சொல்கிறான் என்று பாருங்கள், “நீர் என்னைக் கொன்றுபோட்டாலும் நான் உமது பேரில் நம்பிக்கையாயிருப்பேன்.”

நித்திய நம்பிக்கையில் யோபு எடுத்த நம்பிக்கை, நீர் என்னைக் கொன்றுபோடும், என் சரீரம் சாகும், ஆனால் என் நம்பிக்கை சாகாது. இந்த அழைப்பிற்குத்தான் கர்த்தர் நம்மையும் அழைத்திருக்கிறார். ஆகையால் எதையிழந்தாலும் சரி, நீ தேவன் மீது உள்ள நம்பிக்கையை மாத்திரம் இழந்துபோகக்கூடாது. இருளாய் இருக்கும் நேரத்தில் உங்கள் நம்பிக்கை பிரகாசமானதாக இருக்கட்டும்.

இருளில் நடப்பதினாலே நமக்கு என்ன லாபம்? இருளில் நாம் கர்த்தரை மகிமைப்படுத்தினால் அது உண்மையாகவே கர்த்தருக்கு மகா பெரிய கனத்தைக்கொண்டு வரும். எல்லாம் நன்மையாக இருக்கும்பொழுது ஆடிப்பாடுவதல்ல, வருத்தமும் சஞ்சலமும் இருக்கும்பொழுது நாம் தேவனைத் துதித்துப் பாடுவோமானால் அதுதான் மகத்தான காரியம்.

“...இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத் தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான், அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்ய கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.” (2 சாமு 16:11) தாவீதைக் கர்த்தர் தான் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார், வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார். ஆனாலும் அவனுடைய வாழ்க்கையின் பாதை இருட்டுப்பாதை. அவன் தன் கால்களில் பாதரட்சையைக்கூட அணிய முடியாதபடி தன்னுடைய கர்ப்பப் பிறப்பான அப்சலோமைப்பார்த்து பயந்து, நடுங்கி, ஒளிந்துக்கொள்ள ஓடுகிறான். அவனுடைய மகனே அவனுக்கு விரோதமாக எழுந்து நிற்கிறான்.

தாவீது பயந்து மலையின் மேல் ஏறுகிறான், அந்த சமயத்தில் சீமேயு என்பவன் கற்களை எடுத்து, அவன்மேல் எறிந்து, "பேலியாளின் மகனே! சவுலுக்கு விரோதமாக எழும்பினாயே, உன் இரத்தப்பழி உன்னைப் பிடிக்கும்" என்று அவன் இதயம் கிழியும்படியாக பேசுகிறான். தாவீது மனசஞ்சலமுள்ளவனாக அந்த இருண்ட பாதையிலே நடக்கிறான். இந்தப் பாதை அவனாக தெரிந்தெடுத்த பாதையல்ல. அவன் சாதாரணமாக ஆடுகளை மேய்ந்துக்கொண்டு இருந்தவன். ராஜாவாக ராஜ்யபாரத்தை விரும்பியவன் அல்ல தாவீது. ஆனாலும் கர்த்தர் அவனை அழைத்து அபிஷேகம் பண்ணினார். அதன் விளைவு இன்று இருளிலே நடக்கிறான்.

இந்த இருண்ட பாதையிலே தாவீது நடக்கும்போது அவன் சொல்கிறான், ஜனங்கள் தூஷிக்கட்டும், அற்பமான மனிதர்கள் கூட தூஷிக்கிறார்கள். அவர்கள் என்னை தூஷிக்கும்படி கர்த்தர் அவர்களை அனுமதித்திருக்கிறார். அந்த இருண்ட நேரத்தில்கூட தேவன் மீதுள்ள நம்பிக்கையை விடவில்லை. தேவனுடைய நாமத்தை உயர்த்திப் பிடித்தான். என் கர்த்தர் இதை அனுமதித்திருக்கிறார், அவர் அனுமதித்தபடியே நடக்கட்டும் என்று கர்த்தரையே சார்ந்திருந்தான்.

அருமையானவர்களே! உங்கள் வாழ்க்கையில் எதிரிடையான காரியங்கள் நடக்கின்றனவா? உன்னுடைய நம்பிக்கைக்கு எதிரிடையான சூழ்நிலைகள் நிலவுகிறதா? ஏன் உனக்குக் கிடைக்கவில்லை? இது உனக்கு நடந்துவிடும் என்று எதிர்பார்த்தாயே, ஏன் நடக்கவில்லை? ஏன் இது நின்றுபோய் விட்டது. ஏன்? என்று உலகம் கேட்கிறது. நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள். என் கர்த்தர் எனக்குத் தராதது வருத்தமே, என் கர்த்தர் எனக்குப் பதில் தராதது துக்கமே என்று சொல்கிறீர்களா? அல்லது எனக்குப் பதில் கிடைக்காததும் என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரம்! இதை நான் சந்தோஷமாகவே ஏற்றுக்கொள்ளுகிறேன்.

எனக்குத் தரமாட்டேன் என்று கர்த்தர் நிறுத்திய பாத்திரத்தை நான் பானம் பண்ணமாட்டேன், கிடைக்கும் என்று ஆவலாய் எதிர்பார்த்து இருந்தேன், கிடைக்காது என்ற பதில் எனக்கு கிடைத்திருக்கிறது. இந்தப் பாத்திரம் தேவன் எனக்கு தந்த பாத்திரம், என் தேவனுக்கு நன்றி என்று சொல்வீர்களா?

நேர் எதிரிடையான பதிலைச் சந்திக்கிற தேவ பிள்ளையே, உனக்கு அளிக்கப்பட்ட சூழ்நிலையைக் கர்த்தர் உனக்கு அனுமதித்த பாத்திரம் என்று நீ சொல்லுவாயா? தாவீது தன் துன்பமான வேளையில் பிதா தனக்குத் தந்த பாத்திரம் என்று எடுத்தான். அப்சலோம் அல்ல, சீமேயூ அல்ல, என்னை அபிஷேகம் பண்ணியது என் கர்த்தர். என் கரத்தில் இந்தப் பாத்திரத்தைத் தந்தது என் கர்த்தர் என்று தேவனை மகிமைப்படுத்தினான். நீங்களும் இருளான நேரத்திலே கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். உங்கள் கண்களில் கண்ணீர் வடிகிற சூழ்நிலை இருக்கும்போதும் உங்கள் வாயானது கர்த்தரையே மகிமைப்படுத்துவதாக. நீங்கள் தேவனை மகிமைப்படுத்தும்போது உங்களுடைய இருள் ஆசீர்வாதமாக மாறும். ஆகவே இருளான நேரத்திலே தேவனை மகிமைப்படுத்துங்கள்.

## இருளான நேரம் தேவன் கிருபை தரும் வேளை

இருளாக இருக்கும்போது நமக்கு விளக்கு தேவைப்படுகிறது. அதுபோல இருளான வேளையிலே கர்த்தர் கிருபைகளைத் தருகிறார். “அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.” (அப்.9:16) நீ என்னென்ன பரிசுகளை வாங்குவாய், என்னென்ன இடங்களில் எல்லாம் உன்னைப் போற்றி புகழ்வார்கள், உனக்கு எப்படியெல்லாம் மேடைகளை அமைப்பார்கள் என்பதைக் காண்பிப்பேன் என்று அல்ல. நீ என்னென்ன பாடுகள், துயரங்கள் எனக்காக அனுபவிக்க வேண்டும் என்று பவுலுக்கு ஒரு அழைப்பைக் கர்த்தர் கொடுக்கிறார். ஆகவே கர்த்தருடைய நாமத்தினிமித்தமாக நாமும் பாடுகள் அனுபவிக்கவேண்டும்.

இந்த அழைப்பிற்கு நாம் எத்தனை பேர் ஆயத்தமாக இருக்கிறோம் அருமையானவர்களே! நாம் என்ன பாடுகளை அனுபவிக்கிறோம்? கிருபை வேண்டும், கிருபை வேண்டும் என்று கேட்கிறோமே? எதற்கு கிருபை? பரிசுத்த பவுலுக்கு கிருபை வேண்டும், ஏனென்றால் அவன் பாடுகளையும், உபத்திரவங்களையும் சந்திக்க வேண்டும். அவன் சரீரத்தில் உள்ள பிரச்சனைக்காக மூன்று முறை ஜெபிக்கிறான். காலை, மாலை, இரவு என்று மூன்று வேளையல்ல. இன்று ஜெபிக்கிறான், இரண்டு வருடம் கழித்து ஜெபிக்கிறான், மறுபடியும் ஒரு வருடம் கழித்து ஜெபிக்கிறான். இப்படி மூன்று தரம் ஜெபிக்கிறான், ஆனால் கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்கவில்லை.

"அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது." (2 கொரி. 12:7) சரீரத்திலே ஒரு பலவீனத்தைப் பெற்று அவன் இருளில் நடக்கிறான். அந்தப் பலவீனத்தைக் கர்த்தர் நீக்காமல் அவனை இருளிலே வைத்தார். கர்த்தருடைய சொல்லைக் கேட்டு வந்தவனுக்கு இப்பொழுது வெளிச்சமில்லை. சரீரத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சரீரத்திலே ஒரு பலவீனம் தாக்குகிறது. இப்படி பலவீனமாக இருக்கும்போது அவன் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுகிறான். கர்த்தர் அவனுக்கு இருட்டையே பதிலாகக் கொடுத்தார். தொடர்ந்து இருட்டிலே நடக்கிறான். இந்த இருளில் நடக்க அவனுக்கு கிருபையைத் தேவன் கொடுக்கிறார். பலவீனமாகிய இருள் தொடர்கிறது. அதன் மத்தியில் கிருபை வளர்கிறது.

நம்முடைய வாழ்க்கையில் ஏன் இருள், தேவன் அதிகமான கிருபையைத் தருவதற்காக. ஆகையால் நீங்கள் சோர்ந்துபோகாதீர்கள். எங்கள் வாழ்க்கை இருளாக இருக்கிறதே என்று சஞ்சலப்பட வேண்டாம். இந்த இருளுக்குத் தக்க கிருபைகளைத் தேவன் நிச்சயமாகவே தருவார். சமாதானமாக இருங்கள்.

## இருளான வேளையில் நம் சுபாவங்கள் சீராகும்

தேவன் அனுமதிக்கும் இருள் ஒரு மனிதனுடைய சுபாவத்தை மாற்றுகிறது. "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்." (சங் 119:17) நான் உபத்திரவப்பட்டதினாலே உமது சத்தியங்களை கற்றுக்கொண்டேன். நான் வேதத்தின்படி நடக்க ஆரம்பித்தேன், அதினாலே என்னுடைய சுபாவங்கள் எல்லாம் மாற ஆரம்பித்தது. என் சிந்தனை, என் நடவடிக்கை, என் பேச்சு எல்லாமே மாற ஆரம்பித்தது. என் சுபாவமே முற்றிலும் மாறிவிட்டது. உபத்திரவங்கள், இருட்டான பாதை, சங்கடமான சாலைதான் என்னை மாற்றியது என்று சங்கீதக்காரன் சொல்கிறான்.

"இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். (1பேதுரு 1:6,7)

இப்பொழுது துன்பப்படுகிறது அவசியமான காலம். பரிசுத்த பவுலின் வார்த்தையைக் கவனியுங்கள். பொன்னானது சோதிக்கப்படுகிறதுபோல விசுவாசமும் சோதிக்கப்படும். நான் விசுவாசி என்று சொல்லுவோமானால் கர்த்தர் நிச்சயமாகவே சோதிப்பார். பாடுகள், உபத்திரவங்கள், சங்கடங்கள் இவை வழியாக கடந்துபோகும் போதுதான் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படுகிறது.

விசுவாசம் சோதிக்கப்படுகிறதற்கு முன்பு பேதுரு சொன்ன வார்த்தை, "இவரை நான் அறியேன்." சோதிக்கப்பட்ட பின்பு பேதுரு சொல்கிறான், "கர்த்தருடைய நாளிலே நீங்கள் மகிமையடைவீர்கள். நீங்கள் பாடுகளையும், துன்பங்களையும்,

அனுபவியுங்கள்” என்று சொல்லக் காரணம் உபத்திரவத்தின் வழியாக கடந்து வந்ததினாலே அவன் சுபாவம் மாறிவிட்டது. சத்தியத்தில் நிற்க முடியாமல் தளர்ந்து நின்றவன், தேவனுக்காக நிற்க முடியாதபடி கோழையாக இருந்தவன் தன் ஜீவனையே கொடுக்கிற தைரியசாலியாக மாறினான். அவன் இருளிலே தொடர்ந்து நடந்தபடியினாலே அவனுடைய சுபாவங்கள் எல்லாம் மாறிவிட்டது.

## துன்பம் தேவனை நம்பச்செய்யும்

“அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்.” (யோபு 13:15) அவர் என்னைக் கொன்று போடாவிட்டால் நான் அவர்பேரில் நம்பிக்கையாக இருப்பேன், அல்லது நான் அவர் பேரில் நம்பிக்கையாக இருக்கிறேன், அவர் என்னைக் கொன்று போடமாட்டார்.... இதுதான் நம்முடைய விசுவாசம். இது வெளிச்சத்தின் விசுவாசம். ஆனால் யோபு சொல்கிறான், “நீர் என்னைக் கொன்றுபோட்டாலும் உமது பேரில் நம்பிக்கையாயிருப்பேன் இது இருளின் விசுவாசம். எல்லாமே இருளாகப் போகிறபோது, எல்லாமே எதிரிடையாகப் போகிறபோதும் கர்த்தரை உறுதியாக பற்றிக்கொள்ளுகிறவன் இருட்டிலே நடக்கிறவன்.

உங்களுக்குக் கஷ்டங்களும், துன்பங்களும் வரப்போகிறது என்று சொல்லவில்லை. ஒருசிலருக்கு வருத்தமும், சஞ்சலமும் இருளும் அழைப்பாக இருக்கிறது. சிங்கங்களின் வாயைக் கிழித்து, அல்லேலூயா என்று சொல்வது சிலருக்கு அழைப்பு. அதே சிங்கங்களின் பற்களுக்கு இறையாகி மரிக்கும்போது அல்லேலூயா என்று சொல்லுவது சிலருக்கு அழைப்பு. நம்மில் அநேகருக்கு வெளிச்சத்தின் அழைப்பு; மிக சிலருக்குத்தான் இருளின் அழைப்பு, துயரத்தின் அழைப்பு, வருத்தத்தின் அழைப்பு. அப்படிப்பட்டவர்களுக்குத்தான் தேவன் சொல்கிறார், கர்த்தரையே அதிகமாக நம்புங்கள் என்று.

தாவீது சகலத்தையும் இழந்துபோனான். இருள் சூழ்ந்த வேளை, மனைவி, மக்கள், சொத்து, சுகம், வீடு எல்லாவற்றையும் இழந்துவிட்டான். சகலத்தையும் இழந்து கண்ணீரோடு இருக்கிறான். அவனுடைய இருட்டு மிக அதிகம். அவன் பெலனில்லாமல் போகுமட்டும் அழுதான். இனி அழவே முடியாது என்ற நிலை வரும்வரை அவன் அழுதான். அவ்வளவு இருள்.

என் அருமையான சகோதரனே, சகோதரியே, உன் கண்ணீர் முழுவதும் ஊற்றும்படி அழுதுவிட்டாயா? உன்னுடைய பிரச்சனைகள் அழுத்தமாக நெருக்கி கண்ணீரின் பாதையிலே நடக்கிறாயா? எதிர்பார்ப்புக்கு எதிராக சம்பவங்கள் நடைபெற்று கனத்த இதயத்தோடு, பாரமுள்ள இதயத்தோடு இருக்கிறீர்களா? தாவீதுவின் பாரமுள்ள இதயம், சஞ்சலமுள்ள மனம், தள்ளாடுகிற கால், அழுகிற கண்கள் ஆனாலும் அவன் உதடுகள் உச்சரிக்கிறது, "கர்த்தர் பார்த்துக்கொள்வார்."

"தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர், குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்." (1சாமு 30:6) என் கர்த்தர் பார்த்துக்கொள்ளுவார் என்று தாவீது இருளிலே கர்த்தரையே சார்ந்துக்கொண்டான். கர்த்தரை நம்புகிற தாவீது தனக்கு உண்டான இருளிலே அவன் முறுமுறுக்காமல், ஐயோ நான் கர்த்தரை நம்பினது தவறு என்றெல்லாம் அவன் புலம்பாமல் கர்த்தரையே நம்பியிருந்தான்.

நான் உங்களுக்கு கடைசியாக சொல்லி முடிக்கிற வார்த்தைகள் என்னவெனில், எந்த சூழ்நிலையிலும் எப்படி காரியங்கள் நடந்தாலும் சரி உங்கள் வாயிலிருந்து வருகிற வார்த்தை, "என் கர்த்தர் பார்த்துக்கொள்ளுவார்." இந்த நம்பிக்கை உன் காரிருளை விலக்கிப்போடும். கர்த்தர் உங்கள்

இருளை வெளிச்சமாக்குவார். உன் நம்பிக்கை தழைக்கும். உன் இருளை விட்டு வெளியே வருவாய். நீ வெளியே வந்தபின்பு உன் வாழ்க்கை தேவனை மகிமைப்படுத்தும். இருளில் கர்த்தரை நோக்கிப்பார். கர்த்தரை நோக்கியே அமர்ந்திரு! தேவனை நோக்கி புகழ்ந்துபாடு. இருட்டு நேரத்தில் உன் வாயிலிருந்து வருகிற துதியின் சத்தம் தேவ நாமத்தை மகிமைப்படுத்தும்.

இந்தச் செய்தியை தவறாக விளங்கிக்கொள்ளாதே! கர்த்தர் உனக்கு இருளைத் தரப்போதில்லை. இருள் எல்லாருக்கும் அல்ல. This is a special invitation. ஒரு சிலரைத்தான் கர்த்தர் இந்த இருண்ட வேளைக்கு அழைக்கிறார். அப்படி தேவன் உன்னை அழைத்தால் நீ இந்த இருண்ட நேரத்தில் தேவனை மகிமைப்படுத்துவாயா? கஷ்டமான நேரத்தில் கர்த்தரையே சார்ந்துக்கொள்ளுவாயா? அப்படிச் செய்வாயானால் நீ தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறாய்.

துன்பங்கள் அநேக சமயத்திலே கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தும். கிறிஸ்துவின் நிமித்தம் இருளைச் சந்திக்க பயப்படாதே! கிறிஸ்துவின் நிமித்தம் இருளைக் கடந்துபோக பயப்படாதே! இருள் சூழ்ந்த லோகத்தில் இமைப்பொழுதும் தூங்காமல் பாதுகாக்கிற கர்த்தர் உங்களோடிருப்பார். நம்மைச் சுற்றிலுமாய் இருள், பிரச்சனைகள், பாரங்கள் இவைகளுக்கு மேலே கர்த்தருடைய கரம், கர்த்தருடைய சமூகம் நமக்குச் சொல்லும் வார்த்தைகள், என் மகளே! என் மகனே! உன்னை நான் கைவிடுவதில்லை. உன்னை விட்டு நான் விலகுவதில்லை. நீ பயப்படாதே! இந்த இருளுக்கு பயப்படாதே! நான் உனக்குத் துணை நிற்கிறேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்.

(இந்தச் செய்தி மன ஆறுதலுக்கான செய்தியல்ல. நித்திய நம்பிக்கைக்காக சில ஆலோசனைகளை சொல்லியிருக்கிறேன்.)

# வாழ்க்கையின் நோக்கம்

பேதுருவை தேவன் அழைக்கும்பொழுது மீன்களைப் பிடிக்கிறவனாக இருந்தான். அவனை மனிதர்களை பிடிக்கிறவனாக தேவன் அழைத்தார். தேவன் அவனுக்கு இரண்டு நோக்கங்களை கற்றுக் கொடுத்தார். மீன்களை பிடிப்பதுபோல மனிதர்களைப் பிடிக்கின்ற ஒரு நோக்கம். இந்த நோக்கம் நிறைவேற ஒரு குறிப்பிட்டவர்களின் மேல் இலக்கு வைத்து வலையைப்போடுவது அல்ல. வலையைப் போடுகிறோம், அதில் மீன்கள் கிடைக்கின்றன. அதுபோல மீன் பிடிக்கிறதுபோல மனிதர்களைப் பிடிப்பது சுவிஷேகனுடைய வேலை. இது மொத்தமாக செய்யக் கூடிய வேலை. கொஞ்சம் நாட்கள் கழித்து ஆடுகளை மேய்ப்பாயாக என்ற அழைப்பைக் கொடுக்கிறார். இது மற்றோரு நோக்கம். ஆடுகளை மேய்க்கிற வேலை, அது போதகரின் வேலை. போதகரின் வேலையை தனிப்பட்ட விதத்திலே செய்ய வேண்டும். இந்த இரண்டு நோக்கத்திலும் அவன் வெற்றி பெற்றானா? தோற்றுப் போனானா என்பதைக் கர்த்தர் நமக்கு விளக்கிச் சொல்வாராக.

பொதுவாக வாழ்க்கையின் நோக்கங்கள் நிறைவேறாமலேயே வாழ்க்கைச் சரித்திரம் முடிந்துபோவது வாடிக்கையாக இருக்கிறது. நோக்கங்கள் நிறைவேறவில்லை என்பதற்காக மனிதன் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. எப்படியாவது வாழ்ந்தால் போதும், நோக்கங்கள் நிறைவேறாமல் வாழ்க்கை சரித்திரம் முடிந்தாலும் பரவாயில்லை என்று சராசரி மனிதன் வாழ்கிறான். எல்லா மனிதனுக்கும் ஒரு நோக்கம் உண்டு. தேவன் நமக்கு கொடுக்கிற நோக்கம், மற்றவர்கள் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற நோக்கங்கள்... இவையெல்லாவற்றையும் சுற்றித்தான் நம்முடைய வாழ்க்கை நடக்கிறது.

ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்குச் சொல்கிறார், வருகிற சனிக்கிழமை நாம் சென்னைப் பட்டணத்திற்கு போய் சுற்றிப் பார்த்து வரலாம் என்றார்.

சனிக்கிழமை வருகிறது, பிள்ளைகளெல்லாம் மகிழ்ச்சியுடன் புறப்பட்டுத் தயாராக இருக்கிறார்கள். சந்தோஷமாக பிராயாணத்தைத் தொடங்கினார்கள், கொஞ்சம் தூரம் சென்ற பின்பு சென்னைப் பட்டணம் போகாமல் வேறு பாதையில் வாகனம் செல்கிறது. பிள்ளைகள் தகப்பனை நோக்கி, அப்பா நாம் சென்னைப் பட்டணத்திற்கு போகவில்லையா? மாற்றுப் பாதையில் வாகனம் செல்கிறதே என்று கேட்கிறார்கள். தகப்பன் சொல்கிறான், இல்லை பிள்ளைகளே, நாம் இன்று சென்னைக்கு அருகில் இருக்கிற வேடந்தாங்கலுக்கு செல்கிறோம், அங்கு நிறைய பறவைகள் இருக்கின்றன, அதைப் பார்ப்போம் என்றார்.

அப்படியே அங்கு போய் பிள்ளைகளுக்கு பறவைகளையெல்லாம் காட்டினார். வித்தியாசமான பறவைகள், கூட்டம் கூட்டமான அழகிய பறவைகள், பல வண்ண நிறத்தின் பறவைகளையும் அதின் தன்மைகளையும் பார்த்து அகமகிழ்ந்தனர். நேரம் கடந்து சென்றது, வீட்டுக்குத் திரும்ப வேண்டிய நேரம் தகப்பன் பிள்ளைகளிடம் கேட்கிறான், சந்தோஷமாக இருக்கிறீர்களா என்று. பிள்ளைகளோ கேள்விக்கு மற்றொரு கேள்வியையே கேட்கிறார்கள். சென்னைப்பட்டணத்திற்கு எப்பொழுது போவோம் என்றார்கள். ஏனென்றால் சென்னைப்பட்டணம் போகவேண்டும் என்ற நோக்கம் நிறைவேறவில்லை. சென்னைக்கு அழைத்துக்கொண்டு போவதுதானே நோக்கம், ஆனால் தகப்பனோ வழியிலே பறவைகளைக் காட்டிவிட்டு, திரும்ப வீட்டுக்கு அழைத்துக் கொண்டு செல்கிறாரே என்கிற வருத்தம்.

சென்னைப் பட்டணத்தின் அழகிய கடற்கரை கண்முன் காட்சியளிக்கிறது, காலைத் தொட்டுச் செல்லும் கடல் அலைகள், கடற்கரையின் மண், சென்னையில் உள்ள வானத்தைத் தொடும் உயர்ந்த கட்டிடங்கள்... இவைகளைப் பார்ப்பதே பிள்ளைகளின் நோக்கமாக இருந்தது. ஆகவே பிள்ளைகள் சோர்ந்து திரும்புகிறார்கள். பார்த்த பறவைகளில் திருப்தி அடையவில்லை. பறவைகளையெல்லாம் பார்த்தோமே,

காலை முதல் மகிழ்ச்சியோடே தானே இருந்தோம் என்ற திருப்தி இல்லை. எதையாவது பார்த்து திருப்தியடைவது அல்ல, பார்க்கவேண்டியதை பார்க்கவில்லை என்ற மனவருத்தம் பிள்ளைகளுக்கு.

அதைப்போல் எப்படியாவது வாழ்ந்து முடியவேண்டும் என்று அல்ல, வாழவேண்டியதற்கு ஏற்றபடி நாம் வாழவேண்டுமே, அதுதான் வாழ்க்கையில் பிரதானமானது. ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படியாவது வாழ்ந்து முடிப்பது அல்ல. தேவன் எனக்குக் கொடுத்த நோக்கத்தை நிறைவேற்றுவதே வாழ்க்கை. அந்த நோக்கத்திற்காகவே நாம் பிரயாசப்படவேண்டும். அந்த நோக்கத்திற்காகவே நாம் ஜீவிக்க வேண்டும். ஆம் பிரியமானவர்களே! வாழ்க்கையின் நோக்கங்களை நாம் மறந்துபோகக்கூடாது. எப்பொழுதும் நமக்கென்று ஓர் நோக்கம் இல்லாமல் நாம் வாழ்ந்து விடக்கூடாது. வாழ்நாள் முழுவதும் நாம் பெற்ற நோக்கத்தை நிறைவேற்ற பிரயாசபட்டுக்கொண்டே இருக்கவேண்டும். பொதுவாக மனிதனுக்கு எதையுமே செய்யமுடியாத ஒரு நேரம், அது எதுவென்றால் மரண வேளை. அந்த மரண வேளையில் அவன் மனம் கலங்கிச் சொல்லுவான், இவைகளையெல்லாம் நான் செய்யாமல் போகிறேனே என்று.

ஒரு தகப்பன் தன்னுடைய மரணப் படுக்கையில் கண்ணீர் விட்டுச் சொல்கிறார், என்னுடைய மூன்றாவது மகளுக்கு திருமணம் செய்யாமலே போகிறேனே! என் கடமையில் நான் தவறிவிட்டேனே என்று கண்ணீர் விட்டு அவர் கண்களை மூடிவிட்டார். அவருடைய இதயத்திலே ஒரு பெரிய ஏக்கம். அந்த ஏக்கத்தோடே அவருடைய சரீரம் புதைக்கப்பட்டுவிட்டது. அவருடைய இந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பது அவருடைய மரண வேளையில் வேதனையாக இருந்திருக்கிறது.

பிரியமானவர்களே! பொதுவாக நோக்கங்களை நிறைவேற்ற முடியாத நெருக்கமான சூழ்நிலைகள் நம்முடைய வாழ்க்கையில் வரலாம். கர்த்தருக்கென்று கொடுத்த வாக்கை

நிறைவேற்ற முடியாத சூழ்நிலை, எடுத்த பொறுப்பை முடிக்க முடியாமல் விலகவேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையில் நாம் நினைக்கவேண்டியது, தேவன் எனக்குக் கொடுத்த நோக்கங்களை நான் நிறைவேற்றுவேன் என்பதே. சூழ்நிலைகளின் நிமித்தமாக நம்முடைய நோக்கத்தை விட்டு விலகி, வேறு ஒன்றைச் செய்வது நமக்கும் திருப்தியாக இருக்காது, ஆண்டவருக்கும் திருப்தியாக இருக்காது. ஆகையால் எதையாவது செய்யலாம், எப்படியாவது வாழலாம், எங்கேயாவது போகலாம் என்று அல்ல. எங்கு தேவன் போகச் சொல்கிறரோ அங்கு போக வேண்டும். எப்படி வாழவேண்டுமோ அப்படித்தான் வாழவேண்டும். இதுதான் தேவன் நமக்கு கொடுத்த அருமையான காரியம். ஆனால் நோக்கத்தை நிறைவேற்ற முடியாத ஒரு நேரம் என்பது மரணவேளை தான். அது நிர்ப்பந்தமான வேளை.

## மரண வேளையிலும் தேவநோக்கத்தை நிறைவேற்றின ஆண்டவர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் வேளையில், இன்னும் சற்று நேரத்திலே அவருடைய சரித்திரம் முடியப்போகிறது. விரோதிகள் எல்லாம் முடித்துவிட்டோம் என்று எண்ணுகிறார்கள். ஆண்டவர் அகோர பாடுகள் மத்தியில் இருக்கிறார். அப்பொழுதும் அவருடைய உள்ளத்திலே பிதாவின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமே என்கிற வாஞ்சை. என் பிதா எனக்குக் கொடுத்த நோக்கம், இந்த மரணத்தினாலே உலக மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்பதே. இந்த மரணத்தைச் சந்திப்பதற்கு முன்பாக இன்னும் பிரயாசப்படுகிறார், "அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்." (லூக்கா 23:34)

அருமையானவர்களே! இயேசு சிலுவையிலே ஏறெடுத்த மன்றாட்டு, அவருடைய பிரதானமான நோக்கத்தை நிறைவேற்றியது. மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக வந்தவர், தன்னுடைய கடைசி தருணத்திலும் தன் மரணத்தினாலே

எல்லாரையும் இரட்சிப்பதற்கு முன்பு, தன்னுடைய ஜெபத்தினாலே அநேகரை இரட்சிப்புக்குள் நடத்த வேண்டும் என்று எண்ணி, பிதாவே இவர்கள் செய்கிற பாவத்தை மன்னியும், இவர்களை இரட்சியும் என்று ஜெபம் பண்ணுகிறார். பிதாவின் நோக்கம் நிறைவேற வேண்டுமே என்று கருத்தாய் இருந்தார். செயலற்றுப் போயிருந்த அந்த நேரத்திலும் அவருடைய மனதை அழுத்துகிற மிகப்பெரிய காரியம், "தான் எந்த நோக்கத்திற்காக இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே அவர் அத்தனை அக்கறையுடையவராக இருந்தார்.

என் பிரியமான சகோதரனே! சகோதரியே! உங்களுடைய வாழ்க்கையில் நோக்கங்களை நிறைவேற்றுவதில் நீங்கள் அக்கறையுடையவர்களாய் இருக்கிறீர்களா? நிறைவேற்ற முடியாத நெருக்கமான வேளைகள் வரலாம். ஆனால் நீங்கள் நிறைவேற்ற பிரயாசப்பட்டீர்களா? தேவன் எனக்குக் கொடுத்ததை நான் செய்தே தீருவேன், நான் விட்டுவிடவே மாட்டேன். எந்த சூழ்நிலையாக இருக்கட்டும், என் வாழ்க்கையிலே கர்த்தர் எனக்கென்று ஒப்புவித்த அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நான் தவறிப்போகவே மாட்டேன் என்று நாம் உறுதியாக இருக்கவேண்டும் அருமையானவர்களே!

## பொக்கிஷங்கள்

உலகத்தின் செல்வங்கள் எங்கே இருக்கிறது என்று பொதுவாகக் கேட்டால் மக்கள் இவ்விதமாக பதில் கூறுவார்கள் :- குவைத், ஈராக், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் உள்ள எண்ணெய் கிணறுகள், ஆப்பிரிக்காவில் உள்ள தங்கச் சுரங்கங்கள், சோவியத் நாடுகளில் உள்ள யூரேனியம் என்று. ஆனால் ஒரு ஆசிரியர், ஓர் சிந்தனையாளர், ஒரு தேவபக்தன் இவ்வாறு சொல்கிறார், இவைகளெல்லாம் உலகத்தின் செல்வங்கள் அல்ல. நம்முடைய மிகப்பெரிய சொத்துக்கள் எங்கே இருக்கிறது என்றால் அது நம்முடைய

கல்லறைத்தோட்டத்தில் புதைந்து கிடக்கிறது. கல்லறைத் தோட்டத்தில் அப்படி என்ன செல்வங்கள் இருக்கிறது? அங்கே எலும்புகளும், அழுகிப்போன சதைகளும் தானே இருக்கும். இது எப்படி நம்முடைய சொத்தாக இருக்க முடியும்? அப்படியல்ல என் பிரியமானவர்களே! அந்தக் கல்லறைத் தோட்டத்திலே பாடாத பாடல்கள் முடங்கிக்கிடக்கின்றன! எழுதாத புத்தகங்கள் முடங்கிக் கிடக்கின்றன! பிரசங்கிக்கப்படாத பிரசங்கங்கள் அப்படியே புதையுண்டு கிடக்கின்றன. உலகத்திற்கு வந்தடையாமலே இவைகளின் சரித்திரம் முடிந்துவிட்டது. எத்தனையோ நல்ல வார்த்தைகளை சொல்ல வேண்டிய உதடுகள் அமைதியாய் அடங்கிவிட்டன. எழுத வேண்டிய கரங்கள் அடங்கிவிட்டன. நடக்க வேண்டிய கால்கள் அங்கே முடங்கிவிட்டன. இலட்சியங்கள், தரிசனங்கள் மங்கிவிட்டன! பொக்கிஷங்கள் புதைந்துபோய் விட்டன. தேவ நோக்கங்கள் எல்லாம் சிதைந்துபோய் விட்டன!

என் பிரியமான சகோதரனே! சகோதரியே! அந்தக் கல்லறைத் தோட்டத்திலே நாம் தோண்டி எடுப்போமானால் எத்தனைக் காவியங்கள், எத்தனை ஓவியங்கள், எத்தனை எழுத்துக்கள், எத்தனைக் கடிதங்கள், எத்தனைப் பாடல்கள் உலகத்திற்கு வராமலேயே முடங்கிப்போய் விட்டன! வாழ்க்கையில் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றாமலேயே மடிந்து போய்விட்டார்கள். பிரியமானவர்களே! வாழ்க்கையில் நோக்கத்தை நிறைவேற்றாமல் மடிந்துபோவது ஓர் பெரிய குற்றம். எப்படி அது குற்றமாகும் என்று கேட்கிறோம் அல்லவா? நமக்குக் கொடுக்கப்பட்ட நோக்கத்தை, தேவன் நமக்கு கொடுத்தத் தரிசனத்தை, தேவன் நமக்குக் கொடுத்த தாலந்தைப் பயன்படுத்தாமலேயே நாம் மரித்துப் போவோமானால் அப்படி மடிந்து போவதே குற்றம். அது நல்லதல்ல என் பிரியமானவர்களே!

நாம் எப்பொழுதும், எந்த விதத்திலாகிலும் தேவ நோக்கத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். தேவ நோக்கங்களை தள்ளிவிடாதீர்கள். இதை என்னாலே

செய்ய முடியாது அல்லது செய்ய மாட்டேன் என்பதற்கு ஆயிரம் ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். என்னைத் தவறாகப் புரிந்துக்கொள்ளுகிறார்கள், என்னைக் குற்றப் படுத்துகிறார்கள், என்னை வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் என்று இருக்கலாம். ஆயிரம் பேர் ஆயிரம் கருத்துகளை சொல்லட்டும், நீயோ தேவநோக்கத்தை நிறைவேற்று. ஆண்டவர் உங்களை நம்பியிருக்கிறார். நிச்சயமாகவே நீங்கள் செய்வீர்கள் என்று உங்களை நம்பி தரிசனங்களையும், நோக்கங்களையும் கொடுத்திருக்கிறார்.

## தேவ நோக்கத்தில் யோசேப்பு

"தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்று சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக்கொண்டான்." (ஆதி 50:25) யோசேப்பு தான் உயிரோடு இருக்கும்போதே தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளையிடுகிறான். என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்றான். அவர்கள் ஒரு பெட்டியிலே அந்த எலும்புகளை வைத்து சுமந்து செல்கிறார்கள். அது சாதாரண எலும்புகள் அல்ல. அந்த எலும்புகளுக்குள்ளே ஒரு பொக்கிஷம் இருக்கிறது. அது என்ன? தேவனது நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றின சரித்திரத்தின் அடையாளங்களாகிய யோசேப்பின் எலும்புகள்.

பிரியமானவர்களே நம்முடைய கல்லறை என்ன சொல்லும்? தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றின மனிதன் இங்கே படுத்திருக்கிறான் என்று சொல்லுமா? அப்படிச் சொல்ல வேண்டுமானால் நம்முடைய வாழ்க்கை முழுவதும் தேவ நோக்கத்தை நிறைவேற்றினவராக நாம் இருந்தால் தான் நம்முடைய மரணத்தில் இந்த சாட்சி உண்டாகும்.

யோசேப்பின் சரித்திரம் ஒரு வெற்றி சரித்திரம் அல்ல. அவனுடைய எலும்புகள் அவனுடைய பாதையில் வெற்றித் தூண்கள் அல்ல, குழியிலே தூக்கிப் போடப்பட்டது வெற்றித்

தூண் அல்ல, அன்னியர்களிடம் விற்றுப்போட்டது வெற்றித் தூண் அல்ல, சிறைச்சாலையிலே எகிப்திலே குற்றவாளியாக எறிந்தது வெற்றித் தூண் அல்ல. ஆனாலும் யோசேப்பின் வாழ்க்கை தேவ நோக்கத்தை நிறைவேற்றின வாழ்க்கை. யோசேப்பு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் வெற்றி பெற்றுக்கொண்டே இருந்தான் என்று அல்ல. ஆனாலும் எல்லா விதத்திலும் தேவ நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதே யோசேப்பின் வாழ்க்கை. (You may not be a successful in your life but you must be a purposeful) உங்கள் வாழ்க்கையில் வெற்றி இல்லாமல் போகலாம், ஆனால் தேவ சித்தத்தை நிறைவேற்றாதவர்களாக இருக்கக்கூடாது. வாழ்க்கையில் அநேகக் காரியங்களில் தோற்றுப் போகலாம், பரவாயில்லை. தேவ நோக்கத்தை நிறைவேற்றும்போது தோல்வியே ஒரு ஆறுதல் தான்.

யோசேப்பு பல சூழ்நிலைகளில் தள்ளப்படும்பொழுது அவருடைய மனதிலே இப்படியெல்லாம் தோன்றியிருக்கக் கூடும். என்னை இப்படியெல்லாம் சொல்கிறார்களே என்று. இவைகளுக்கு மத்தியில் யோசேப்பு தோல்விப் பள்ளத்தாக்கிற்குப் போகவில்லை. உண்மையாகவே அது வெற்றி அல்ல. குழியிலே தள்ளப்படுவது வெற்றியா? நீ எங்களுக்கு வேண்டாம் என்று சகோதரர்களால் தள்ளப்படுவது வெற்றியா? அன்னியருக்கு விற்றுப் போட்டது வெற்றியா? போத்திபார் வீட்டிலே ஒரு பெண் எழுந்து விபச்சாரக்காரன் என்று குற்றம் சாட்டுவது வெற்றியா? பொய்க் குற்றச்சாட்டுக்காக சிறைச்சாலை சென்றது வெற்றியா? இப்படிப்பட்ட பாதையைத் தான் யோசேப்பு கடந்து வந்தான். ஆனாலும் அவன் சமாதானமாக இருந்தான். அதற்குக் காரணம் தன்னுடைய வாழ்க்கையில் தேவ சித்தத்தை நிறைவேற்றுகிறேன் என்ற திருப்தியில்.

என் பிரியமான சகோதரனே! சகோதரியே! நீங்கள் வெற்றிப் பாதையில் நடக்கலாம், நடக்காமல் இருக்கலாம். உங்களுக்கு எல்லா காரியங்களும் கைக்கூடி வராமல்

இருக்கலாம். ஆனால் ஒன்றை மாத்திரம் நினைவில் நிறுத்துங்கள், நான் தேவ சித்தத்தை, தேவ நோக்கத்தை நிறைவேற்றுகிறவன் என்று தைரியமாக இருங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பார்.

"பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்." (ஆதி 45:7) யோசேப்பு குழியிலே தள்ளப்படும்போது ஏன் என்னைத் தள்ளினார்கள் என்று யோசிக்கவில்லை. விற்றுப்போடும் போதும் ஏன் என்று யோசிக்கவில்லை. குற்றஞ்சாட்டும் போதும் ஏன் என்று யோசிக்கவில்லை. இந்தக் காட்சிகளுக்கு முன்னே தேவன் தனக்குக் கொடுத்த தரிசனத்தையே யோசித்தான். "என் அரிக்கட்டு நிமிர்ந்து நிற்கும்" என்று கர்த்தர் காட்டின தரிசனம் நிறைவேறவேண்டும். ஆகையால் யோசேப்பு சமாதானமாக இருந்தான். இத்தனை சம்பவங்கள் எனக்கு நேரிடக் காரணம் தேவனது நோக்கமாகிய உங்களை காப்பாற்றும்படி என்னை முன்னமே அனுப்பினார் என்றான். ஆகவே நடைபெறுகிற சம்பவங்களையெல்லாவற்றையும் குறித்துப் பயப்படாதிருங்கள். உங்களை துன்பப்படுத்துகிறவர்கள், விரோதமாக எழுந்து நிற்கிறவர்கள் அவர்களுக்கு நன்மை செய்யும்படியே இன்று நாம் தீமையை அனுபவிக்கிறோம். அவர்களுடைய இரட்சிப்பின் நிமித்ததாகவே நீங்கள் இப்படி பாடுபடுகிறீர்கள். தேவனுடைய நோக்கம் என் வாழ்க்கையில் நிறைவேறுகிறது என்று சந்தோஷமாக இருங்கள் அருமையானவர்களே.

எல்லாமே வெற்றியாக நடக்கவேண்டும் என்று அல்ல. வெற்றியாய் நடக்கலாம், நடக்காமலும் போகலாம். வெற்றி என்பது வாழ்க்கையில் பெரிய காரியம் அல்ல. நம்முடைய வாழ்க்கையில் தேவ நோக்கம் நிறைவேறுகிறதா? அதுதான் பெரிய காரியம். ஆம் பிரியமானவர்களே! யோசேப்பின் எலும்புகள் சொல்கிறது, என் வாழ்க்கை வெற்றியோ, வெற்றியில்லையோ நான் தேவ நோக்கத்தை நிறைவேற்றினவன். (I have fulfilled Gods purpose in my life)

பிரியமானவர்களே! போன வாரம், போன மாதம் முடிந்துவிட்டது அல்லவா? இரவு படுக்கைக்குச் செல்லும் முன் சற்று யோசியுங்கள். தேவ நோக்கத்தை முடித்தீர்களா என்று. கர்த்தருடைய நோக்கம் நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நிறைவேறிக்கொண்டே இருக்கவேண்டும். ஆண்டவர் எதற்காக இந்தப் புதிய நாளை நமக்குக் கொடுத்தார். நம்மிடம் என்ன பேசினார். என் பிறப்பின் நோக்கம் என்ன? இவைகளைக்குறித்து நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் பிரியமானவர்களே!

## தேவநோக்கத்தில் பவுல்

பரிசுத்த பவுல் இயேசு கிறிஸ்துவினாலே பிடிக்கப்பட்டவுடன் அவனுடைய முதல் கேள்வி என்ன? ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? அப்படியானால் தேவனே என்னைக் குறித்து உம்முடைய நோக்கம் என்ன? (what is the purpose of the life) என்னுடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன? என்னைப் பிடித்ததின் நோக்கம் என்ன என்று பவுல் கேட்கிறார். பிரியமானவர்களே, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதின் நோக்கம் என்ன? சிந்தியுங்கள்!

"ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது" (2 தீமோ 4:6) பவுல் தன்னுடைய காலம் முடிகிற நேரத்திலே அவருடைய அறிக்கை எப்படியிருக்கிறது என்று பாருங்கள்... அநியாயமாகக் குற்றம் சாட்டப்பட்டேன், என்னை மிகவும் துன்புறுத்தினார்கள், நான் பெரிய பணக்காரன், எனக்கு இதெல்லாம் நேரிட்டுவிட்டது என்று புலம்பித் தவிக்கவில்லை.

அவருடைய அறிக்கை எப்படி அமைந்திருந்தது என்றால், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" இதுதான் வாழ்க்கையின் நோக்கம். என்னுடைய வாழ்க்கையின் ஓட்டத்தை நான்

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக வெற்றியாக முடித்தேன் என்று பவுல் சொல்லக் காரணம் அது முற்றிலுமாக தேவ நோக்கத்தைக் கொண்டது. பிரியமானவர்களே! அநேகருடைய வாழ்க்கை 75 அல்லது 80 வயதை கடந்தபின்பும் அவர்களிடம் சந்தோஷமாக இருக்கிறீர்களா என்றால் நாங்கள் சந்தோஷமாக இல்லை என்றே பதில் வருகிறது. வாழ்க்கையில் திருப்தியே இல்லை என்கிறார்கள். ஏன் திருப்தியில்லை? பெரிய உத்தியோகத்தில் இருந்தவர்கள், நல்ல சம்பளத்தைப் பெற்றவர்கள், வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் பெற்றவர்கள் அப்படியிருந்தும் அவர்களுடைய ஆத்துமா ஏன் கலங்குகிறது? அவர்கள் தேவ நோக்கத்தை நிறைவேற்றாதவர்கள். எவ்வளவு சம்பளம் வாங்குகிறோம் என்று அல்ல நமக்கு கொடுத்திருக்கிற வேலையில் நாம் தேவ நோக்கத்தை நிறைவேற்றுகிறோமா?

உலகம் எங்கும்போய் பிரசங்கம் பண்ணு, வேதத்தை விளக்கிச் சொல், காணிக்கை கொடு... இவைகளை மாத்திரம் தேவன் எதிர்பார்க்கவில்லை. நாம் கற்ற கல்வியிலும் அவர் நோக்கமிருக்கிறது. நீங்கள் ஒரு மென்பொருள் பொறியாளராக இருக்கலாம் அதிலும் தேவன் உங்களுக்கென்று ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். (You may be a software engineer but God has a purpose in you) அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். நீங்கள் ஒரு ஆசிரியராக இருக்கலாம். கற்றுக்கொடுக்கிற அந்த பணியிலே தேவ நோக்கம் நிறைவேற வேண்டும். கற்றுக் கொடுக்கிறதில் இலட்சியம் நிறைவேறாமல், சம்பளத்திற்கு மாத்திரம் வேலை செய்வோமானால் வாழ்க்கையில் ஏமாற்றமும் வருத்தமும் அடைந்துவிடுவோம்.

பிரியமானவர்களே! சரித்திரத்தை சற்று திரும்பிப் பார்த்தால் பணி ஓய்வு வந்தவுடன் (Retirement) இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளின் அநேகர் மரித்துவிடுகிறார்கள். வேலை செய்யும் போதெல்லாம் நன்றாக இருந்தவர்கள் பணி ஓய்வு என்று சொல்லும்பொழுது அவர்கள் மரித்துவிடுகிறார்களே, ஏன்? அந்த வேலை முடிவுக்கு

வந்ததினாலே தங்களுடைய நோக்கமும் முடிந்துவிட்டது என்று எண்ணிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் வேலையை தங்கள் நோக்கமாக வைத்திருந்தார்கள். அப்படியல்ல வேலைக்குள் தேவ நோக்கம் இருக்குமே தவிர வேலையே தேவ நோக்கம் அல்ல. நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் தேவ நோக்கம் இருக்கிறது. நீங்கள் செய்யும் காரியமே நோக்கம் அல்ல. நீங்கள் மனைவியாக இருந்தால் மனைவியாக வாழும்பொழுது அதிலே ஓரு நோக்கமிருக்கும். கணவனாக இருந்தால் கணவனாக வாழும்பொழுது அதிலே ஓரு நோக்கம் இருக்கும். பிள்ளைகளாக, மாணவர்களாக இருக்கும்பொழுது உங்களுக்கென்று ஒரு நோக்கம் இருக்கிறது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதிலே நாம் எப்பொழுதும் அக்கறையுடையவர்களாய் இருக்கவேண்டும்.

நாம் ஞானஸ்நானம் எதற்காக எடுத்தோம்? சரீரத் தேவைக்காக அல்லது உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக ஞானஸ்நானம் எடுத்தோம் என்று சொல்லுவீர்களோ? இவைகளுக்காக ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை. ஞானஸ்நானம் ஆவிக்குரிய காரியம். நாம் புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்துக்கொள்ளுவதற்காக ஞானஸ்நானம் எடுக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவ நோக்கத்தைப் பற்றிப்பிடிக்க வேண்டுமே தவிர ஞானஸ்நானத்தை பற்றிப்பிடிக்கக்கூடாது. ஞானஸ்நானத்தை மாத்திரம் பற்றிப்பிடித்தால் அது சடங்காச்சாரம், தண்ணீரைப் பற்றிப்பிடிக்கிறோம் என்று அர்த்தம். ஞானஸ்நானம் எடுத்தபிறகு புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்துக்கொள்ளவிட்டால் ஞானஸ்நானம் என்ற நோக்கம் நிறைவேறவில்லை என்று ஆகிவிடும். ஏறக்குறைய ஞானஸ்நானம் எடுக்காதவர்களாகவே இருக்கிறோம். ஆகையால் நோக்கங்களை எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பரிசுத்த பவுலை தேவன் ஊழியத்திற்கு அழைக்கும்போது தேவனுடைய நோக்கத்தை நாம்

பார்க்கிறோம். "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்." (அப் 9:16) பவுலை அழைக்கும் போதே சொல்லிவிட்டார், பாடுபட வேண்டுமென்பதை. இயேசு உன்னை அழைக்கிறார், இனி உனக்கு கஷ்டமே இல்லை, இனி உனக்கு துன்பங்களே இல்லை, உன் கண்ணீர் யாவையும் துடைப்பார்.... அப்படியல்ல என் அருமையானவர்களே! இயேசு உன்னை அழைத்தால், நீ கண்ணீர் விடவேண்டியதிருக்கும். அவருடைய நாமத்தினிமித்தம் நீ பாடுகளை, துன்பங்களை அனுபவிக்க வேண்டும். இதுதான் தேவ நோக்கம்.

பவுலின் வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் நிறைவேறிக்கொண்டே இருக்கிறது. அவர் எருசேலமிற்குப் போக ஆயத்தமாகிறார். ஜனங்கள் அவரைப்பிடித்து இழுத்து நிறுத்தி, பவுலே எருசலேமிற்குப் போகவேண்டாம், அங்கே உம்மைத் துன்பப்படுத்துவார்கள், உம்மைப் பாடுபடுத்துவார்கள், உமக்கு மிகுந்த வருத்தமும் சஞ்சலமும் உண்டாகும், என் சகோதரராகிய பவுலே எருசலேமிற்குப் போக வேண்டாம் என்று அழுது, அழுது அவரைத் தடுக்கிறார்கள். போக வேண்டாம் என்று தன்னைச் சுற்றிலுமாய் கண்ணீர் வடிக்கிற மக்களுக்கு மத்தியிலே தேவன் தனக்குக் கொடுத்த நோக்கத்தை பவுல் தன் கண் முன்னே நிறுத்துகிறார். நீ எனக்காக அநேக இடங்களில் பாடுபடவேண்டும், எனக்காக வேதனை அனுபவிக்க வேண்டும் என்று தேவன் அழைத்த அழைப்பை நினைவு கூர்ந்தார். எனக்காக இரத்தம் சிந்தின இயேசு கிறிஸ்துவின் நோக்கத்தை நிறைவேற்றப் போகிறேன் என்று தேவனுடைய நோக்கத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டார்.

"அதற்கு பவுல்; நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப் பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதந்கு மாத்திரமல்ல; மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றார்."

(அப். 21:13,14) கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் இதுதான் தேவ நோக்கம். நான் தேவ நோக்கத்தை தூர எறிந்துவிட்டு வாழ்வதைவிட என் மரணமானது தேவ நோக்கத்தை நிறைவேற்றுமானால் என் வாழ்க்கையை விட மரணமே எனக்கு லாபம். கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்கிறார் பரிசுத்த பவுல். ஏனென்றால் தேவ நோக்கத்தை மரணம் நிறைவேற்றுகிறபடியினால்.

கிறிஸ்துவின் வருகை தாமதப்பட்டால் நாம் எல்லோரும் ஒரு நாளில் மரிக்க வேண்டும். அப்பொழுது நம்முடைய மரணம் பரிதாபமாக, பரிகாசத்திற்குரியதாக இருக்கக்கூடாது. ஜனங்கள் ஐயோ! இப்படி இவன் மரித்துப்போனானே என்று நம்மைப்பார்த்து பரிதாபப்படக் கூடாது. நம்முடைய மரணம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். வாழ்நாள் முழுவதும் தேவ நோக்கம், தேவ சித்தம் என்று நாம் வாழ்ந்திருபோமானால் நம்முடைய ஜீவன் பிரியும்போது தேவ நாமம் மகிமைப்படும்.

பரிசுத்த பவுல் தமஸ்குவிற்கு போவதற்கு முன்பே மரித்துப் போயிருந்தால் என்ன நடந்திருக்கும். இயேசு கிறிஸ்துவினுடைய இராஜ்ஜியமானது சத்தியத்திற்கு ஒரு தூணாக நிற்கிற மாபெரும் மனிதனாகிய பவுலை இழந்திருக்கும். கொலோசெயர், பிலிப்பியர், எபேசியர், எபிரேயர், கலாத்தியர் போன்ற நிருபங்கள் நமக்கு கிடைக்காமல் போயிருக்கும். இவைகளெல்லாம் கல்லறையில் முடங்கிப் போயிருக்கும். இந்த மாபெரும் மனிதன் தன்னை தேவ நோக்கத்திற்கு ஒப்புக்கொடுத்ததினாலே நாம் எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.

அருமையானவர்களே, உங்களுக்கு ஒரு திறமை, சக்தியிருந்து அதைப் பயன்படுத்தாமலே மரித்துப்போனால், அது பொறுப்பற்ற தன்மை. கர்த்தர் அந்த மரணத்திற்கு பெயரிடுவார், "பொறுப்பற்றவன்" என்று. ஒருவன் மரித்து விட்டால் நாம் உடனே வசனம் எழுதுகிறோம் "நல்ல

போராட்டத்தைப் போராடினான்; ஓட்டத்தை முடித்தான் விசுவாசத்தை காத்துக்கொண்டான்" என்று. ஒருவன் பரிசுத்தவானாக இருந்தும், தேவ நோக்கத்தை நிறைவேற்றாமல் மரிப்பானேயாகில், கர்த்தர் எழுதுவார் (His death is irresponsible) 'பொறுப்பற்றவனாக மரித்துப்போனான்' என்று. நம்முடைய வாழ்க்கைச் சரித்திரம் இப்படி முடிந்துவிடக்கூடாது பிரியமானவர்களே!

என் அருமையான சகோதரனே! சகோதரியே! ஆண்டவருடைய கரங்கள் எத்தனையோ ஏழை மக்களின் கண்ணீரைத் துடைத்து, அற்புதங்களைச் செய்தது. அவருடைய கரத்தினால் எத்தனையோ பேர் சுகம் பெற்றனர். அந்தக் கைகள் இப்பொழுது செயலற்றுப் போய்விட்டது, ஆணிகள் கடாவப்பட்டு விட்டன. பெத்தானியா, எருசலேம், தெக்கபோலியா, கலிலேயா, யூதா என்று அலைந்து திரித்த அவருடைய பாதங்கள் இப்பொழுது அடங்கிவிட்டன. இனி அந்தப் பாதங்கள் எங்கும் போகமுடியாத நிலையில் ஆணிகளினால் கடாவப்பட்டுவிட்டன. குறிப்பிட்ட தூரத்திற்குப் பின் எட்டிப்பார்க்க முடியாதபடி அவருடைய பார்வையும் குறைந்துவிட்டன. எதுவுமே செய்ய முடியாத நிர்ப்பந்தந்தமான நிலையில் இயேசு சிலுவையில் தள்ளப்பட்டார்.

அந்த வேளையில் ஒன்றே ஒன்றைத்தான் அவரால் செய்ய முடிந்தது. அவராலே ஜெபிக்க முடிந்தது. தன்னுடைய மரண வேளையிலும் அவர் ஜெபத்தைத் தேவ நோக்கத்திற்காகப் பயன்படுத்தினார். (He used the prayer for God's purpose) பிதாவே! இவர்களை மன்னியும் என்றார். சிலுவையில் தன்னால் எதையுமே செய்ய முடியாது என்று இயேசு முடங்கிவிடவில்லை. எதையுமே செய்ய முடியாத நேரத்திலும் பிதாவின் நோக்கத்தை நிறைவேற்ற ஜெபம் பண்ணினார். இரட்சிப்பைத் தொடங்கி வைத்தார். ஆகையால் தன்னுடைய கடைசி நேரத்தில் கூட தேவ நோக்கத்தை நிறைவேற்றுகிறவாராய் இருந்தார் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

## பேதுருவின் அழைப்பு

ஒருவனுடைய தோட்டத்தில் ஒரு கல் கிடக்கிறது. அது சாதாரணமான கல். அதின் மேல் ஒரு நாய் படுத்திருக்கிறது. அந்தக் கல்லை ஒருவன் தனக்கு வேண்டும் என்று அந்த வீட்டாரிடம் கேட்கிறான். தாராளமாக எடுத்துக்கொண்டு போ, இதில் நாய் தான் படுத்திருக்கிறது என்றான். கொஞ்ச நாட்கள் கழித்து கல்லை எடுத்துச் சென்றவன் வந்து தன்னுடைய வீட்டுக்கு அவர்களை அழைத்தான். அவர்களும் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அவனுடன் சென்றார்கள். அங்கு அழகான பறவை ஒன்று கல்லில் செதுக்கப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது. இந்த அழகான சிற்பம் உங்களுக்கு எப்படி கிடைத்தது? எங்கு வாங்கியது என்று கேட்டனர். உங்கள் வீட்டில் ஒரு நாய் ஒரு கல்லில் படுத்திருந்ததே, அந்தக் கல் தான் இந்தப் பறவை என்றான். நான் அந்தக் கல்லைப் பார்க்கும்பொழுது அது சிற்பம் செய்ய ஏற்றது என்று என் கண் கண்டது, அதினால் நான் அந்தக் கல்லை எடுத்து வந்து இந்த சிற்பத்தை செதுக்கினேன் என்றான். ஒருவனுடைய கண்ணுக்கு அது சாதாரண கல்லாக தெரிந்தது, ஆனால் மற்றொருவனுடைய கண்ணுக்கு அது அழகான சிற்பமாகத் தெரிந்தது.

எருசலேம் நகரத்தின் ஓரத்திலே ஒரு கல் கிடக்கிறது. அது தேவனுடைய பார்வையில் படுகிறது. அந்தக் கல் தான் பேதுரு (Rock stone) "..நீ யோனாவின் மகனாகிய சீமோன்; நீ கேபா என்னப்படுவாய்" (யோவான் 1:42) நீ பாறை என்னப்படுவாய் என்றார். பேதுரு ஒரு சாதாரண கல். அந்த சாதாரண கல்லாகிய பேதுருவைக் கர்த்தர் எடுத்து அருமையான சிற்பமாக உருவாக்க விரும்பினார். கலிலேயா கடற்கரையில் சாதாரணமாக நடந்து போகிற மீனவன் தான் பேதுரு. அந்தக் கரடுமுரடான கல்லிலே ஒரு சிற்பத்தை, ஒரு வல்லமையான அப்போஸ்தலனை தேவன் கண்டார்.

பிரியமானவர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளை எப்படிப் பார்க்கிறீர்கள். அவர்களை ஒரு சாதாரண கல்லாக

பார்க்கிறீர்களா? அல்லது அவர்களில் தேவ நோக்கத்தைப் பார்க்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளை ஒரு தேவ ஊழியக்காரர்களாக, ஒரு இன்ஜீனியராக, ஒரு டாக்டராக, சீர்திருத்தவாதியாக, ஒரு சிந்தனையாளராக பார்க்கிறீர்களா? எதையுமே பார்க்காமல் என்னுடைய வயதான காலத்திலே என்னைக் கவனித்தால் போதும் என்று இருக்கிறீர்களா? இது சாதாரண தரிசனம். என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்பதைப் போல வேறே சந்தோஷம் இல்லை. என் பிள்ளைகள் எழுந்து பெரிய வல்லவர்களாக இருப்பார்கள். சற்று யோசித்துப் பாருங்கள், என் மகனாலே சமுதாயத்திற்குப் பயனுண்டா? என்னுடைய மகளாலே மற்றவர்களுக்குப் பிரயோஜனம் உண்டா? இவைகள் தான் பெற்றோர்கள் காண வேண்டிய தரிசனம். உங்கள் பிள்ளைகளைக்குறித்த தேவ நோக்கம் நிறைவேறவேண்டும். அதற்காகத்தான் கர்த்தர் நமக்குப் பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார். பிள்ளைகள் யார்? பிள்ளைகள் தேவனது சுதந்திரம். அந்தப் பிள்ளைகளிடத்தில் தேவ நோக்கத்தை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள்.

பிதாவின் நோக்கம் என்ன? தன்னுடைய குமாரன் சிலுவையில் பலியிடப்படவேண்டும் என்பதே. எல்லோரையும் இரட்சிப்பதற்காக பலியிடப்படவேண்டும். பேதுருவை ஆண்டவர் ஏன் ஊழியத்திற்கு அழைத்தார், அவருடைய நோக்கம் என்ன? சிலுவைக்குப் போகிற தன்னோடு பேதுரு வரவேண்டும். சிலுவைப் பாதையைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணவேண்டும் என்பதே. பேதுருவை உருவாக்கிக்கொண்டே வருகிறார். “அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்; ஆண்டவரே, இது உனக்கு நேரிடக்கூடாதே, இது உமக்கு சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துக்கொள்ளத் தொடங்கினான்.” (மத் 16:22)

சிலுவைப் பாதையை கற்றுக்கொள்ள வேண்டிய பேதுரு, சிலுவைக்குப் போக வேண்டாம் என்று கடிந்துக் கொள்ளுகிறான். பேதுருவை அருமையான சிற்பமாக செதுக்க

தேவன் அவனைத் தெரிந்தெடுத்தார். ஆனால் அவனோ தேவனுக்கு இடறலாயிருக்கிறான். தேவன் அவனைப் பார்த்து, அப்பாலே போ சத்தானே என்று அவனைக் கடிந்துக் கொண்டார். தேவ நோக்கத்தை தடைபண்ணுகிறதெல்லாம் பிசாசுகள். கர்த்தருடைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடாது, கர்த்தர் கொடுத்த பணியைச் செய்யக் கூடாது என்று உங்களைத் தடைச்செய்கிற எண்ணம் பிசாசு கொடுத்தது. இனி நான் கர்த்தருக்காக, சபைக்காக நான் எதையுமே செய்ய மாட்டேன் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தது பிசாசானவன். நீங்கள் உடனே என்ன சொல்ல வேண்டும். அப்பலே போ சாத்தானே, தேவன் எனக்குக் கொடுத்த பணியை நான் நிச்சயமாக செய்து முடிப்பேன் என்று தீர்மானம் எடுங்கள் அருமையானவர்களே!

பேதுரு தொடர்ந்து தேவனுடைய நோக்கத்திற்கு விரோதமாகவே போய்க்கொண்டே இருந்தான். தேவன் பேதுருவை நோக்கி, நீ எனக்கு இடறலாகவே இருக்கிறாய், இனி நீ எனக்கு வேண்டாம் என்று தள்ளிவிடவில்லை. தேவன் கையில் எடுத்த கல்லை கீழே போடவில்லை. என் பிரியமான சகோதரனே! சகோதரியே! நீ எடுத்த கல் இன்று அற்பமாகத் தெரியலாம். தேவ நோக்கமான சிற்பத்தை செதுக்குவதில் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நீ எடுத்த கல்லைத் தூர எறிந்து விடாதே. உன் தரிசனத்தைத் தூர தூக்கிப் போடதே. உன் சந்தர்ப்பங்களைத் தூர எறிந்துவிடாதே. தேவன் நிச்சயமாகவே அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவார். ஆகவே தேவ நோக்கம் நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.

தேவன் பேதுருவிடம் பேசுகிறார், பேதுருவே, நீ என்னை மறுதலித்துவிடுவாய். இத்தனை தூரம் என்னோடு நடக்கிறாய் அல்லவா? அப்படியிருந்தும் என்னைத் தெரியாது என்று சத்தியம் செய்வாய் என்றார். "அதற்குப் பேதுரு: நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்" (மத் 26:35) என்றான். "நான் மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன்"

என்று தேவனையே எதிர்த்துப் பேசுகிறான். அதோடே நிறுத்தவில்லை, மற்ற பதினோரு பேரும் மறுதலித்தாலும் நான் மறுதலிக்கமாட்டேன் என்றான். ஆண்டவரே, அப்படிச் செய்யாமல் இருக்க எனக்கு உதவிச் செய்யும் என்று கேட்கவில்லை. ஆண்டவர் அவனைத் தள்ளிவிடவில்லை. நீ ஊழியம் செய்வதற்குத் தகுதியில்லாதவன், நீ உன்னை மேன்மைப்படுத்துகிறாய் என்று தள்ளவில்லை. தேவன் எடுத்த கல்லை இன்னும் கீழே போடவில்லை. தேவ நோக்கம் அவரை வற்புறுத்துகிறது. உருவாக்கிவிடலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

"நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறேன்..." (மாற்கு 16:7) உயிர்த்தெழுந்த காலைப்பொழுது தேவன் கலிலேயாவுக்குப் போகிறார். சீஷர்களுக்குச் செய்தி அனுப்புகிறார். சீஷர்களுக்கு என்று சொல்லும்பொழுதே அதில் பேதுருவும் அடங்கும். ஆனால் தேவன் ஒரு சிறப்புச் செய்தியைப் பேதுருவுக்கு அனுப்பினார். அவனை உருவாக்க வேண்டும் என்று தேவன் உறுதியாக இருந்தார். பகுத்தறிவு சொல்லியிருக்கும் இனி அவன் வேண்டாம், எனக்குத் தெரியாது என்று சபிக்கவும் சத்தியம் பண்ணவும் துணிந்தவன், மறுதலித்தவன், அவனைக்கொண்டு ஒன்றும் செய்யமுடியாது என்று. ஆனாலும் அந்தக் கல்லை எறிந்துவிடவில்லை. தேவனுடைய நோக்கம் அவனை உருவாக்குவதிலே உறுதியாக இருந்தது.

நீங்களும் மிகவும் நொந்துபோய், இனி நான் ஜெபம் பண்ணமாட்டேன், ஆண்டவரைத் தேட மாட்டேன் என்று புலம்புவதினாலே என்ன பயன்? கர்த்தர் இன்னும் உன்னை நேசிக்கிறார். இன்னும் கிருபைகளைத் தருகிறார். உன் மீது வைத்த நம்பிக்கையை அவர் முறித்துவிடவில்லை. உன்னிலே தேவ நோக்கத்தை உருவாக்க தேவன் பிடிவாதமாக இருக்கிறார். உன்னைத் தேவனுடைய நோக்கத்திற்காக உருவாக்கிவிடலாம் என்று இருக்கிறார்.

பேருதுவின் வாழ்க்கை இன்னும் மோசமான நிலையை அடைகிறது. தேவனை விட்டு விலகிப்போய்க் கொண்டேயிருக்கிறான். “சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான்.” (யோவான் 21:3) பேதுரு ஒரு பாறையாக தேவனுக்காக விளங்குவான் என்று தேவன் நம்பிக்கொண்டிருக்கிறார். கலிலேயாவில் அவர் அவனுக்காக காத்திருக்கிறார். ஆனால் பேதுரு அங்கே போகவில்லை. தேவனுடைய அழைப்பைப் பெற்றவன், தேவன் உயிர்த்தெழுந்த செய்தியைக் கேட்டவன், தேவனை நோக்கி ஓட வேண்டிய கால்கள் இப்பொழுது மீன் பிடிக்க கடற்கரையை நோக்கி ஓடுகிறது. தேவனுடைய அழைப்பைத் தூர எறிந்துவிட்டு மீன்பிடிக்கச் சென்றுவிட்டான்.

தேவன் தன் கையில் எடுத்த பேதுருவாகிய கல்லை இன்னும் கீழே போடவில்லை. இன்னும் அவனை உருவாக்கப் பிரயாசப்படுகிறார். இனி அவன் தேவ நோக்கத்தை நிறைவேற்ற மாட்டான் என்று தள்ளிவிடவில்லை. “...அவர் கர்த்தர் என்று சீமோன் பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனாய் இருந்தபடியினால், தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான்.” (யோவான் 21:7) அவன் வஸ்திரமில்லாதவன் என்றால் சீஷர்களுடைய வஸ்திரத்தை மாற்றி மீன் பிடிக்கிற வஸ்திரத்தைப் போட்டிருந்தான். அந்த வஸ்திரத்தோடே கர்த்தரைப் பார்க்க முடியாது. மீன் பிடிக்கிறவனாகவே தன்னை மாற்றிக்கொண்டான்.

மற்ற சீஷர்கள் தங்களுடைய வஸ்திரத்தோடே இருக்கும்பொழுது பேதுரு மட்டும் தன் வஸ்திரத்தை மாற்றியிருக்கிறான். பேதுரு தன் செயல்களினால் சொல்கிற செய்தி, நான் இனி மீன்களைத்தான் பிடிப்பேன் என்று. இந்த நிலையிலும் தேவன் அவனை உருவாக்கப் பிரயாசப்படுகிறார். அந்தக் கல்லைத் தூர எறிந்துவிடவில்லை. அவனை உருவாக்கியே தீருவேன் என்று வைராக்கியமாக இருக்கிறார். பேதுருவின் வாழ்க்கையில் அவனுடைய வார்த்தையினால்

தேவனை மகிமைப்படுத்தவில்லை, தேவ அழைப்பிலே மகிமைப்படுத்தவில்லை, அவன் உழைப்பிலே மகிமைப்படுத்தத் தவறிவிட்டான். (Peter was not at all a succesfull man) பேதுரு வெற்றியுள்ள மனிதன் அல்ல.

## தேவநோக்கத்தை நிறைவேற்றும்வரை போராடு

“இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படி...” (யோவான் 21:19) பேதுரு மரித்தபின்பு அவனுடைய கல்லறையிலே ஒரு வாக்கியம் எழுதப்படவேண்டுமானால் இப்படி எழுதலாம், “தேவ நோக்கத்தை தன் மரணத்தினாலே நிறைவேற்றின மாபெரும் மனிதன்” என்று.

பிரியமானவர்களே! நம்முடைய வாழ்க்கையிலும் அநேக தோல்விகள் இருக்கலாம். தோல்விகள் வரத்தான் செய்யும். ஆனால் நாம் தேவ நோக்கத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். (The failures is not the absence of success) வெற்றியில்லை என்பது தோல்வியல்ல. நாம் இன்னும் முயற்சிக்காமாலே இருப்பது தான் தோல்வி. ஆகவே தொடர்ந்து பிரயாசப்படுங்கள். பரிசுத்தமாக இருப்பது, விசுவாசமாக இருப்பது தேவ நோக்கம். அதை நிறைவேற்றுங்கள்.

பேதுருவாகிய அந்தக் கல்லானது உருவாக்கப்பட்டு பெரிய அப்போஸ்தலனாக, பெரிய சிற்பமாக காலத்தினால் அழியாத சிற்பமாக நம் முன் நிற்கிறது. அந்த சிற்பம் பேசுகிறது “நான் வெற்றியுள்ள மனிதன் அல்ல; ஆனால் தேவ நோக்கத்தை நிறைவேற்றின மனிதன்” என்று. (I was not a successful man but always Iam a purposeful man)

நீங்கள் என்ன தீர்மானம் எடுக்கப்போகிறீர்கள் அருமையானவர்களே! வெற்றி, வெற்றி என்று ஓடாதீர்கள்! தேவ நோக்கம், தேவ நோக்கம் என்று ஓடுங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

# நீடிக்கட்டும், நீங்கட்டும்

கப்பர்நகூமிற்கு இயேசு வருகிறார். திரளானக் கூட்டம் அவரைப் பார்க்க, அவர் செய்யும் அற்புதங்களையும், அதிசயங்களையும் வேடிக்கைப் பார்க்க ஒரு பெரிய கூட்டம். போவோர் வருவோரைப் பார்க்க ஒரு கூட்டம். இவற்றிற்கு மத்தியில் இரண்டு பேர் பிரச்சனைகளோடு இயேசுவைக் காண காத்திருக்கிறார்கள். பன்னிரெண்டு வருட பிரச்சனையோடு வந்திருக்கிறார்கள். வேதனை நிறைந்த அந்த இரண்டு ஆத்துமாக்கள் இயேசுவிற்காக காத்திருக்கிறார்கள். தங்கள் பிரச்சனைக்கு தேவன் உதவி செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு காத்திருக்கிறார்கள். இந்தத் திரளானக் கூட்டத்தின் மத்தியிலே பரலோக தேவனை எதிர்பார்த்த இரண்டு ஆத்துமாக்கள்.

நாமும் சபைக்குச் செல்கிறோம், கூட்டத்தோடு கூட்டமாக செல்கிறோமா? அல்லது தேவன் என்னிடம் பேச வேண்டும் என்ற வாஞ்சையோடு போகிறோமா? அப்படி வாஞ்சையோடு இருப்போமானால் நாம் பக்கியவான்கள், பாக்கியவதிகள். அங்கே ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருந்தபோதிலும் அந்த இரண்டு ஆத்துமாக்களும் எதிர்பார்ப்போடு அங்கு வந்திருந்தனர். ஒருவருடைய எதிர்பார்ப்பு பன்னிரெண்டு ஆண்டு காலம் தன் வீட்டில் இருந்த இன்ப சூழ்நிலை மறைந்து விடக்கூடாது. பன்னிரெண்டு ஆண்டுகளாக தன் காலைச் சுற்றி வந்த அருமையான மகள் தன் வாழ்க்கை சரித்திரத்தை முடித்துவிடக்கூடாது. தன் வீட்டில் பிரகாசமாக எரிந்த விளக்கு அனைந்துவிடக்கூடாது. பன்னிரெண்டு ஆண்டுகாலமாக தன் வீட்டில் இருந்த சந்தோஷம் தொலைந்துவிடக்கூடாது என்ற வேதனையோடு இருக்கிற ஆத்துமா.

மற்றொரு ஆத்துமா பன்னிரெண்டு ஆண்டு காலமாய் தன்னைச் சுற்றி இருந்த இருள் அகல வேண்டும். பன்னிரெண்டு ஆண்டுகளாக எனக்கு இருந்த வேதனைகள், துக்கங்கள்,

கவலைகள் மறைய வேண்டும் என்ற தவிப்போடு இருக்கிற மற்றொரு ஆத்துமா. ஒருவன் இழந்து விடக்கூடாது என்ற நம்பிக்கையோடு வந்திருக்கிறான்; மற்றொருவள் இழந்து விட வேண்டும் என்ற நம்பிக்கையோடு வந்திருக்கிறாள். இரண்டு பேருக்குமே கடுமையான பிரச்சினைகள். இரண்டுமே மரண தருவாயில் உள்ள பிரச்சனைகள்.

பன்னிரெண்டு ஆண்டு காலத்தினுடைய சந்தோஷம் நீடிக்கவேண்டும் என்று ஒருவன். பன்னிரெண்டு வருட துன்பம், வியாதி நீங்க வேண்டும் என்று ஒருவள். ஒருவன் யவீரு என்ற ஜெப ஆலயத் தலைவன். (a popular man) இன்னொருத்தி யாரென்றே தெரியாது. அவளைக் குறித்து எதுவுமே சொல்லப்படவில்லை. அவள் ஒரு முக்கியமான பெண் அல்ல. (a unpopular woman) இந்த இரண்டு பேரும் இயேசுவிடத்தில் தங்கள் பிரச்சனைக்கு பதிலை எதிர்பார்த்து வந்திருக்கிறார்கள்.

பன்னிரெண்டு வருடமாய் மிகுந்த உபத்திரவத்திலிருந்த பெண் மரணத்தைத் தவிர தனக்கு எதிர்காலமே இல்லை. இனி என்னுடைய வாழ்க்கையில் எதையுமே சாதிக்கப்போவது இல்லை என்ற இருண்ட நிலையில் இயேசுவைச் சந்திக்க வந்திருக்கிறாள். மனதிலே ஒரு தீர்மானத்தை எடுக்கிறாள். இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டால் நான் சொஸ்தமாவேன் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. இயேசு தன்னை சுகமாக்கிவிடுவார் என்பதிலே அவளுக்கு எந்த சந்தேகமும் இல்லை. பூரணமான சுகத்தைத் தருவதற்கு இயேசு வல்லவர். அதிலே அவளுக்கு சந்தேகமேயில்லை. ஆகவே இயேசுகிறிஸ்துவின் மீது நல்ல நம்பிக்கையோடு விசுவாசத்தோடு அவள் வந்திருக்கிறாள். ஆனால் அவளுக்கு ஒரு பெரிய சந்தேகமிருக்கிறது. இயேசு சுகமாக்குவாரா, சுகமாக்கமாட்டாரா என்று அல்ல. சொஸ்தமாவேன் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. சொஸ்தமானால் என்ற சந்தேகம் அவளுக்கு இல்லை. அவளுடைய சந்தேகம் என்னவென்றால் தன்னால் இயேசுவைத் தொடமுடியுமா? முடியாதா?

இயேசுவைத் தொடமுடியாத நிலையிலும், அவர் முன்பாகப் போய் நிற்க முடியாத நிலையில் தான் இருப்பதை அவள் உணர்ந்தாள். தொடலாம் என்று எண்ணினால் அவள் கண்களுக்கு முன்பாக நிற்பது யவீரு என்ற ஜெப ஆலயத் தலைவன். சபைக்குள்ளும் சங்கத்திற்குள்ளும் வரமுடியாத தடை அவளுக்கு இருக்கிறது. அவளைத் தொட்டாலே தீட்டு. அப்படிப்பட்ட ஒரு பெண் இயேசுவண்டை கடந்து வருவதை ஜெப ஆலயத் தலைவன் கண்டால் உடனே தடுத்து நிறுத்திவிடுவான். அவனுடைய கண்கள் அவளை உற்றுநோக்கும், சுற்றிலும் இருக்கிற ஜனங்களும் அவளை அறிவார்கள், ஆகையால் தடுத்து நிறுத்திவிடுவார்கள். இந்தச் சூழ்நிலையில் அவளுக்குள் எழும்புகிற கேள்வி தொட முடியுமா? இயேசு சுகமாக்குவார் என்ற நம்பிக்கை அவளுக்கு உண்டு, ஆனால் தொட முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லை.

பிரியமானவர்களே! நமக்கும் இயேசு எல்லாவற்றையும் செய்ய வல்லவர் என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் எனக்குச் செய்வாரா என்கிற சந்தேகம். விசுவாசம் நிறைய இருக்கிறது. மத்திய வானத்தில் இயேசு வருவார். மரித்தவர்களை உயிரோடே எழுப்புவார். இவற்றிலெல்லாம் நமக்கு விசுவாசம் உண்டு. விசுவாசம் எவ்வளவு பெரிதாக இருந்தபோதிலும் அனுபவரீதியான நம்பிக்கை இல்லாதிருக்குமானால் அந்த விசுவாசம் பலனற்றதாகிப் போய்விடும். இன்றும் நம்மில் அநேகம் பேருக்கு விசுவாசமிருந்த போதிலும் நம்பிக்கை என்பது இல்லாததினாலே விசுவாசம் சரியான பலனைத் தரமுடியாமல் போயிற்று.

கப்பர்நகூமில் இந்த இரண்டு ஆத்துமாக்களும் தேவனுடைய உதவிக்காக காத்திருக்கிறது. யவீரு ஜெப ஆலயத் தலைவன் மிக முக்கியமானவன். அவன் மகள் மரண தருவாயிலிருக்கிறாள். சற்று தாமதித்தாலும் அவள் மரித்துப் போவாள். மற்றொருவள் மிகுந்த கஷ்டத்தில் இருந்தாலும் உடனே மரித்துப்போகிற தருவாயிலில்லை. இப்பொழுது நம்முடைய அறிவு வேலைச் செய்கிறது.

போதகரே! ரபூனி! நீர் இப்பொழுது யவீரு வீட்டிற்குப் போகவேண்டும், அவனுடைய மகள் கொடிய வேதனைப்படுகிறாள். அவளைப்போய் சுகமாக்கும். இதுதான் நம்முடைய எதிர்பார்ப்பு. பன்னிரெண்டு வயது பிள்ளை மரண தருவாயிலிருக்கிறாள், அவளைத் தொட்டு சுகமாக்க வேண்டும். இது நியாயமான எதிர்ப்பார்ப்பு.

முதலாவதாக வந்ததும் யவீரு தான். இரண்டாவது வந்தது அந்தப் பெண். முதலாவது வந்தவனுக்கு உதவி செய்வதுதான் நியாயமானது. இது உலகத்தின் நீதி. ஆனால் ஆண்டவர் இரண்டாவது வந்த பெண்ணுக்கு முதலாவதாக உதவி செய்தார். முதலாவதாக வந்த யவீருக்கு இரண்டவதாக உதவி செய்தார். "God had His own agenda" கர்த்தர் தன் இஷ்டப்படித்தான் செய்வார். ஆகவே எனக்குத்தான் நீர் செய்ய வேண்டும், நான் தான் முதலவதாக வந்தேன், நான் தான் senior என்று நாம் உரிமை எடுக்க முடியாது. தேவன் நம்மை எப்படி வைக்கிறாரோ அப்படித் தான் அமைந்துவிடும் அருமையானவர்களே!.

நம்முடைய வாழ்க்கையில் நாம் உரிமைப் பாராட்டவே முடியாது. எல்லாமே தேவனுடைய கிருபைதான். கர்த்தரிடத்தில் உரிமைப்பாராட்டி கேட்கலாம் என்று சில பிரசங்கியார்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள். அவர்கள் சுட்டிக்காட்டுகிற வேத வசனம் "வரும் காரியத்தைக்குறித்து எனக்குக் கட்டளையிடுங்கள்" என்று ஆண்டவர் சொன்னார் என்கிறார்கள். வரும் காரியத்தைக்குறித்து கட்டளையிடச் சொல்லவில்லை. சரியான மொழிபெயர்ப்பு என்னவென்றால் "வரும் காரியத்தைக் குறித்து எனக்கு கட்டளையிடுவீர்களோ?" என்பதுதான். இன்றைக்கு இயேசுவே இதைச் சுகமாக்குவீராக! ஆமென் என்று ஜெபிக்கிறார்கள். கட்டளையிட நாம் யார் பிரியமானவர்களே!.

நம்மை சுகமாக்குவதோ, சுகமாக்காமல் போவதோ எல்லாம் தேவனுடைய கிருபையினாலே உண்டாவது. நாம் பிழைத்திருப்பதும் நாம் நிர்மூலமாகதிருப்பதும் நம்முடைய

உரிமை என்று அல்ல. நாம் பிழைத்திருப்பதும் நிர்மூலமாகதிருப்பதும் நம் தேவனுடைய கிருபை. கிறிஸ்துவிடத்தில் உரிமைப்போராட்டம் எடுக்கக்கூடாது. ஆண்டவருடைய திட்டம், நோக்கம் நம்முடைய வாழ்க்கையில் இருக்கவேண்டும்.

இயேசு கிறிஸ்து கேட்கிறார், "என்னைத்தொட்டது யார்?" என்று அந்தப் பெண்ணைப் பார்த்துக் கேட்கிறார். அவள் இயேசுவை தொட்டிருக்கிறாள். நீ வேதனை நீங்கி சுகமாயிரு! என்றார். அவளுடைய வியாதி உடனே சொஸ்தமாயிற்று. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். வியாதி மாத்திரமல்ல, அவளுடைய பெயரோடு ஓட்டியிருந்த அவமானமும் நீங்கிற்று. இதுதான் தேவன் செய்கிற பெரிய காரியம். இதுதான் முற்றிலும் சுகமாவது.

நாமும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்படுகிறோம். நாம் யாராக மாற்றப்பட்டோம்? பரிசுத்தவானாக. நாம் சுத்தமாக்கப்பட்டு இருக்கிறோம். எதினாலே சுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்? அவருடைய மன்னிப்பினாலே சுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். மன்னிப்பினாலே சுத்தமாக்கப்பட்டு இருக்கிறோம் என்று சொன்னபிறகு நாம் அவ்வளவு கெம்பீராக நடக்கமுடியாது என்பதினாலே வேதம் சொல்கிறது, "நம்மை அவருடைய இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கி, அவருடைய உயிர்த்தெழுதலினாலே நம்மை நீதிமான்களாக மாற்றியிருக்கிறார். ( He sanctified afterwards by His resurrection He justified us) ஆகவே இரட்சிக்கப்பட்ட நாம் எல்லொரும் பிதாவுக்கு முன்பு நீதிமான்களாக்கப்பட்டு இருக்கிறோம். The stigma has gone. பாவ மன்னிப்பு மாத்திரமல்ல, அதைவிட கூடுதலாக நீதிமான்களாக்கபட்டு இருக்கிறோம். வியாதி சுகமானது மாத்திரமல்ல. சமுதாயத்தில் தொடக்கூடாதவள் என்ற அவல நிலைமையைக் கர்த்தர் மாற்றினார். The holistic healing. முற்றிலுமாக சுகமாக்கப்பட்டாள். அவளுடைய விசுவாசத்தைக் குறித்து ஆண்டவர் சொல்கிறார், "உன் விசுவாசம் உன்னை

இரட்சித்தது." அந்த விசுவாசம் ஒரு பெரிய விசுவாசமல்ல. ஆபிராகமிற்கு ஏற்பட்டது போல சோதனைக்குட்பட்ட விசுவாசமல்ல. ஆனால் தேவன் மெச்சிக்கொண்ட விசுவாசம். அந்த விசுவாசத்தை தேவன் ஏற்றுக்கொண்டார். அவளுக்கு வேத அறிவு குறைவானது, வேதத்தைப்பற்றி அதிகம் தெரியாது.

பிரியமானவர்களே! உங்களுக்கு வேதத்தில் அநேக காரியங்கள் தெரியாமல் இருக்கலாம். நீங்கள் வருத்தப்படுகிறீர்களா? அர்மகெதோன் யுத்தம் என்றால் என்ன என்று தெரியவில்லையா? பரவாயில்லை, அந்த நாட்களில் நீங்கள் இருக்க மாட்டீர்கள். அந்திக்கிறிஸ்துவின் உயரம் என்னவென்று தெரியவில்லையா? பரவாயில்லை, நீங்கள் அவனைப் பார்க்கப்போவதில்லை. வேதத்தினுடைய ஆழம், அகலம் தெரியவில்லையா? பரவாயில்லை, இயேசுவின் அன்பின் ஆழம், அகலம் தெரியவேண்டும். வேதத்திலுள்ள மகத்துவம் நமக்குத் தெரிந்தால் நல்லது, தெரியவிட்டால் பரவாயில்லை. பரலோகத்தில் பன்னிரெண்டு வாசல்கள் தெரியவில்லையா? பரலோகத்திற்குப் போகும் வழி தெரியுமா? அது போதும். போகும் வழி எது? "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்". ஆம்! பிரியமானவர்களே! நம்முடைய விசுவாசம் குறைந்த அளவாயிருந்தாலும் கர்த்தர் ஏற்றுக்கொள்ளுவார்.

சரித்திரத்திலே ஒரு சம்பவத்தைப் பார்ப்போம். சிம்சோன் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவன். ஆனால் அவன் தன்னுடைய தரிசனத்தை மறந்து பெண்களோடு ஐக்கியமாகி தன் வாழ்க்கையை பாழாக்கிக்கொண்டான். தேவனுடைய அழைப்பை நஷ்டமாக்கிக் கொண்டு வேடிக்கைக் காட்டுகிற மனிதனாக கையிலே விலங்கிடப்பட்டு அந்த பெலிஸ்தியருக்கு மத்தியிலே அவன் நிறுத்தப்பட்டிருக்கிறான். இப்பொழுது அவன் எல்லாவற்றையும் இழந்துவிட்டான். தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டும் என்ற விசுவாசம் அவனுக்குள் இருந்தது. அது அற்பமான விசுவாசம். அந்த நெருக்கமான சூழ்நிலையில் அந்த விசுவாசத்தை எடுத்தான்.

அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாக இந்தத் தேசத்தை பழிவாங்கும்படியாக இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும் என்று விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். சங்கிலியினால் கட்டப்பட்டவன், வேடிக்கை காட்டப்பட்ட மனிதன், பரிகாசம் பண்ணப்பட்டவன். விசுவாசத்தில் ஏறெடுத்த கடைசி ஜெபம் மண்டபமே அதிர்ந்தது. தூண்கள் சரிந்து விழுந்தன. பெலிஸ்திய பிரபுக்கள் மடிந்தனர். வேதம் சொல்கிறது, உயிரோடிருக்கும்போது சிம்சோனினால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும் அவன் மரிக்கும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகம். அவனுடைய விசுவாசம் ஜெயித்தது. நெருக்கமான சூழ்நிலையில் அவனுடைய விசுவாசம் வெற்றியைத் தந்தது. இந்த பெண்ணுக்கும் பெரிய விசுவாசமல்ல, நெருக்கத்தில் எடுத்த விசுவாசம் அவளுக்குப் பெரிய வெற்றியைத் தந்தது.

அருமையான சகோதரனே! சகோதரியே! உங்களுக்கு வேதத்தினுடைய பெரிய மகத்துவங்கள் தெரியாமல் இருக்கலாம். இயேசுவை விசுவாசிக்கிறீர்களா? அவரைக் கர்த்தர் என்று விசுவாசிக்கிறீர்களா? அவர் எல்லாவற்றையும் நேர்த்தியாகச் செய்வார் என்று விசுவாசிக்கிறீர்களா? விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும். அன்று கப்பர்நகூமில் அந்த இரண்டு ஆத்துமாக்களும் வேண்டியபடியே யவீருவுக்கு நீடித்தும், அந்த ஸ்தீரிக்கு வியாதியை நீக்கியும் விட்டார். கர்த்தர் சகலத்தையும் செய்ய வல்லவர். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**இயேசுவைப்பற்றி அறிவிக்க**
**வார்த்தைகள் போதும்,**
**இயேசுவை அறிவிக்க**
**வாழ்க்கை வேண்டும்.**

நமது போதகரின் தரிசனம்

# VELLORE CHRISTIAN COMMUNITY CENTRE


## Library & Bible Research Center
## Good Samaritan Guidence Home

**Please uphold us in your prayers to fulfill our Pastor's vision**


*Wish you all a Christ Centered Christmas and Blessed New Year 2020*

சத்திய முழக்க வாசகர்கள் அனைவருக்கும்

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...



"ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்." (அப் 9:6)



நோக்கங்கள் மனிதனை இயக்குகின்றன. நோக்கமில்லா மனிதன் வெறும் இயந்திரமே. நம்மைக் குறித்து நமக்கு நோக்கங்கள் உண்டு. பெற்றோர், உறவினர், நண்பர் இப்படி நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கும் நம்மைக் குறித்து நோக்கமுண்டு. இவை எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளுக்கும் நம்மைக் குறித்த ஒரு நோக்கமுண்டு. இந்த நோக்கம் உங்களுக்குத் தெரியுமா?

அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தராலே பிடிக்கப்பட்ட உடனேயே தம்மைக் குறித்து கர்த்தரின் நோக்கம் என்ன என்பதையே முதலாவது அறிந்துக் கொள்ள பவுல் ஆசைப்பட்டார்.

நம்மில் தேவ நோக்கம் நிறைவேற வேண்டுமெனில், நாம் தேவ சித்தத்தோடு இணைய வேண்டும். மோசே தேவ நோக்கத்தை அறிந்த போதிலும், தேவ சித்தத்தோடு இணையாமல் தன் மாம்சீக வழியில், ஓர் எகிப்தியனைக் கொன்றதினால், அவன் தோல்வியையும் தன் இனத்தின் எதிர்ப்பையுமே சந்தித்தான். ஆகவே மாம்சீக வழியை, ஆலோசனையைத் தள்ளிவிட்டு, தேவநடத்துதலுக்கு நாம் காத்திருக்க வேண்டும்.

தேவ நோக்கம் நிறைவேற தேவசித்தம் முதலாவது நம்மில் நிறைவேற வேண்டும். "பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே" என்று யோசுவாவை விசுவாசத்தில் முன்னேறி நிற்கச் சொல்கிறார். கர்த்தர் வாக்குத்தத்த தேசத்தை சுதந்திரமாகத் தங்களுக்கு தரப் போகிறார் என்ற தேவசித்தத்தின் நிச்சயத்தை யோசுவா அறிந்திருந்தான். அதற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். நம்மைக் குறித்த தேவசித்தத்தை அறிந்து நாம் நிச்சயித்திருப்போமானால், தேவனுடைய நடத்துதலுக்கு நாம் முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும். நம்முடைய சுயசித்தத்தை நாம் அடக்க வேண்டும். உலகில் கனம் பொருந்தினவனாயிருந்தும் தேவ நோக்கம் எனும் அறிவில்லாத மனுஷன் அழிந்து போகின்ற மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். (சங். 49:20)

**எவ்விதத்திலும் தேவநோக்கத்தை காத்துக்கொள்**

Mr : Ebenezar Sundararaj
Editor : Saththiya Muzhakkam
22, 1st West Cross Road, Gandhi Nagar,
Vellore - 632 006. Cell : 0 98430 43554

SMM